Registered as a News Paper   பக்கங்கள் 08   விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 02 (15-01-1993) வெள்ளிக்கிழமை ஓசை 832

## இளாலி பயணிகளை பதிவு செய்ய முடிவு

இளாலியூடான படகுப் போக்குவரத்தின் போது இதுவரை பிரயாணிகள் பதிவு மேற்கொள்ளப்படவில்லை. சென்ற வாரம் இடம்பெற்ற கடற்படையினரின் படுகொலைச் சம்பவத்தில் இறந்தோர் தொகை ஐம்பதிற்கு மேல் என கருதப்பட்ட போதும், இறந்தோரின் உடல்களை அடையாளம் காணமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியிருந்தோம். இதனை (8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மீது பெரும் தாக்குதல்

# மன்னார் - வவுனியா.படை குவிப்பு

## களரக ஆயுதங்களும் நகர்வு

(நமது நிருபர்)

வன்னியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்க சிறிலங்கா இராணுவத்தினர் தயாராகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்திட்டத்தின் ஒருபகுதியாக மன்னார்-வவுனியா மாவட்டங்களிலுள்ள இராணுவ முகாம்களில் பெருமளவு படையினரும், நவீன களரக ஆயுத தளபாடங்களும் குவிக்கப்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது. இப்பாரிய இராணுவ நடவடிக்கை எவ்வேளையிலும் ஆரம்பிக்கலாம் என்றும், இந் நடவடிக்கையின் பிரதான நோக்கம் மன்னார்- வவுனியா பிரதான வீதியை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதலே எனவும் தெரியவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் பிரதான நிலப்பகுதியில் இருக்கும் இராணுவமுகாம்களிலும், வவுனியா மாவட்டத்தில நகரில் உள்ள இராணுவ முகாம்களிலுமே படைக்குவிப்பு இடம் பெறுவதாகத் தெரிய வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் முகாம்களில் குவிக்கப்படும் படையினரும், ஆயுத தளபாடங்களும், கடல் மார்க்கமாக தெற்கில் இருந்து கொண்டு வரப்படுவதாகவும், அத்தோடு டாங்கிகளும், கவசவாகனங்களும் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

வவுனியாவிற்கும், அநுராதபுரத்திற்கும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் இருந்து தரை வழியாக இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர். மன்னாரைப் போலவே இங்கும் டாங்கிகள், கவசவாகனங்கள் என்பனவும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேசமயம், வவுனியா மாவட்டத்தின் பல கிராமப் புறப் பகுதிகளில் விமானங்கள் தாழப் பறந்து நோட்டமிட்டுச் செல்வதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

சிறிலங்கா இராணுவத்தரப்பு திட்டமிட்டுள்ள இப்பாரிய இராணுவநடவடிக்கை பெரும்பாலும், வவுனியா - [8-ம் பக்கம் பார்க்க]

## படைக்கு ஆள்திரட்ட 11 நிலையங்கள் திறப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு மேலதிகமாக ஆட்களைத் திரட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்று வெள்ளி முதல் கொழும்பில் பதினொரு இடங்களிலும் மாகாணத் தலைநகர்களிலும் இதற்கான நிலையங்கள் திறக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடத்தப்படும் என்று அவ்வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

இன்று 15ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு இதற்கான நேர்முகப்பரீட்சை நடத்தி [8-ம் பக்கம் பார்க்க]

## பூநகரி; நல்லூரில்

## கரையொதுங்கிய படகில் அடையாள அட்டை மீட்பு

(கிளிநொச்சி)

கிளாலியிலிருந்து கடந்த இரண்டாம் திகதி புறப்பட்டு பூநகரி நல்லூரில் கரையொதுங்கிய படகொன்றிலிருந்து அடையாள அட்டையொன்றும் பிரயாண அனுமதியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிகண்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தடி எனும் முகவரியுடைய இராசதுரை அருள் என்பவரது அடையாள அட்டையும் (இல. 703011632V), 8 - 12 - 92 அன்று வதிரி அனுமதி வழங்கும் காரியாலயத்தில் வெளிநாடு செல்வதற்கு என பெற்ற பிரயாண அனுமதியுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவருக்கு என்ன நடந்தது என்பது அறியப்படவில்லை.

(16)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரிபடகுச்சேவை நாளை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப்புலிகள் நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசாருக்கு பதவிஉயர்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதிவணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ ஊடாக விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட இரண்டு பொலிசாரும் நேற்றுக் காலை இரத்மலானை விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

பொலிஸ்மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேரா உட்பட உயர் அதிகாரிகள் பலர் விமான நிலையத்தில் சமுகமளித்திருந்தனர்.

ஓட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இந்த இரண்டு பொலிசாருக்கும் உடனடியாகவே பதவி உயர்வும், இரண்டு மாதகால விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சார்ஜன்ட கே. எல்.எம். பண்டாரா, பொலிஸ் சாரதியான எட்வேட்பெரேரா ஆகிய இருவருக்கும் தமது சொந்த ஊர்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## ஆசிக்குளத்தில் 6 பொலிசார் புலிகளின் தாக்குதலுக்கு பலி

வவுனியா ஆசிக்குளம் பகுதி சிறிலங்காப் பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் ஆறு பொலிசார் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வவுனியாவிற்குவட-கிழக்கே ஆசிக்குளம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் இவர்கள்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடத்தியதில் ஆறு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

## இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம்

## டென்மார்க் பிரதமர் பதவி விலகினார்

டென்மார்க்கில் அரசாங்கத்தின் முறைகேடான நடத்தைகள் பற்றி நடத்தப்பட்ட நீதி விசாரணை முடிவுகளை பிரதம மந்திரி போல்ஸ் லோற்றர் பரிசீலனை செய்துவருகிறார்.

டென்மார்க்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் டென்மார்க் நீதி அமைச்சு முறைகேடாக நடந்தது என்று நிரூபிக்கப்பட்டால், டென்மார்க் அரசே பதவி விலகவேண்டி ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து டென்மார்க்கிற்கு சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் டென்மார்க்கில் தங்க அனுமதி வழங்கப்பட்ட பின்னர், அவர்கள் குடும்பங்களைடென்மார்க்குக்குள் அனுமதிப்பதில்லை என்று நிதி மற்றும் நீதி அமைச்சு [8-ம் பக்கம் பார்க்க]

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வு; புலிகள் தயாராகவுள்ளனர்

### சந்தேகமில்லை என்கிறார் ஆயர்

(கொழும்பு)

'விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தையின்மூலம்இனப்பிரச்சினையைத் தீர்க்கத்தயாராக இருப்பதாகத் தெரிகின்றது. இதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை' இவ்வாறு கொழும்பு திரும்பிய ஆங்கில திருச்சபை ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ பி.பி.ஸி நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''யாழ். நகரில் ஒரு வீட்டில் நாங்கள் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினோம். விரைவாகச் சிந்திக்கும் தன்மையையும். மிருதுவான பேச்சையும் அவரிடம் காணமுடிந்தது.

நிலைமையை அவர் நன்கு அறிந்திருந்தார். அவரதுபதில்கள் முடிவாகவும், தெளிவாகவும் இருந்தன.

''விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட இரு பொலிஸார் விடுதலைசெய்யப்பட்டமை நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாகும். இதனடிப்படையிலேயே தலைவர் பிரபாகரன் இப்பிரச்சினையைக் கையாண்டுள்ளார் என நான் நினைக்கின்றேன்.

''கட்டடங்கள், பாடசாலைகள் வடபகுதியில் உடைக்கப்பட்டுள்ளன. மக்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் சீவிக்கின்றார்கள். இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துஎரிபொருள் இன்மையினால் சீர்குலைந்து உள்ளது. நாட்டின் ஏனைய பகுதி மக்க (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் மீதான தாக்குதல் 19பேர் பலி; 15 பேர் காயம்

[பாக்தாத்]

வளைகுடாப் போர் நிபந்தனைகளை ஈராக் மீறியதற்காக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தெற்குஈராக்கில் கடுமையான விமானத் தாக்குதலை நடாத்தியுள்ளன. பிரெஞ் போர்விமானங்கள், பிரிட்டிஷ் குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவையும் அமெரிக்க விமானம்தாங்கிக்கப்பல் கிட்டிகொக்கிலிருந்து புறப்பட்ட விமானங்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட போர் விமானங்கள் தெற்குஈராக்கிலுள்ள ஏவுகணைத் தளங்கள் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல்களை நடாத்தியதாக சொல்லப்படுகிறது.

இந்த விமானங்கள் அனைத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கடிகாரமா ? றேடியோவா ?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284, கிரான்வி வீதி, (வானவில் கஃபார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### விதை தேவை

புளியம் விதை தேவை. தொடர்பு - ''மில்க்வைற்'' (சி-5782]


## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''சனத்தொகை கணக்கெடுப்பு முறைகளும், பயன்பாடுகளும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் நான்கு மணிக்கு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## போசாக்கு குறைவு

(நியூயோர்க்)

பத்து வருடங்களாக இலங்கையில் நடந்து வரும் போரினால் ஐந்து வயதுக்குக் குறைந்த சுமார் அறுபது வீதம் சிறுவர்கள் போதிய ஊட்டச் சத்தின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தகவலை யுனிசெவ் எனப்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பு குழந்தைகளுக்கான நிறுவனம் கூறுகிறது.


## கிராம அபிவிருத்தி இலாகாவின் மாதர் அபிவிருத்தி நிலையங்களில்

# தையல், மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பம்

கல்வித்தகைமை - கல்விப்பொதுத் தராதர (சாதாரணம்) பரீட்சை

வயது எல்லை - 18 வயதிற்கு மேல்

விண்ணப்பமுடிவு திகதி - 30 . 01 . 1993

பயிற்சி ஆரம்பம் . 10 . 02 . 1993

பயிற்சி நிலையங்கள் அமைந்திருக்கும் பிரிவுச் செயலர் பிரிவுகள் - யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், உடுவில், வேலணை.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பக்காரர் வதியும் பிரிவுச் செயலருக்கு விலாசமிடப்பட்டு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தையல் மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட வேண்டும்.

து. வைத்திலிங்கம்.<br>
மாவட்ட பிரதி ஆணையாளர்,<br>
அரச அதிபருக்காக.<br>
யாழ். மாவட்டம். (சி/ 5766)


## றெலோ விலகும்?

சுதந்திரக்கட்சி எம். பியான மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து விலகிக் கொள்வது பற்றி றெலோ இயக்கம் ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டிக்கவும், அரைகுறைச் சமஷ்டிக்கும் ஆலோசனை சமர்ப்பித்த யாழ் மாவட்ட எம். பியான சிறினிவாசன் லண்டனிலிருந்து கொழும்பு திரும்பியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்டத்தில் 1993-ல் அமுல் நடாத்தப்படவுள்ள சங்கீத பாட சேவைக்கால பயிற்சி வகுப்புக்கள் தொடர்பான கால அட்டவணை கோட்டரீதியாக யாழ். கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ்வரும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் வட-இந்து மகளிர் கல்லூரியில் தை 19, வைகாசி 11, புரட்டாதி 13-ந் திகதிகளில் நடைபெற உள்ளது.

மருதனார்மடக் கோட்டக் கல்வி அலுவலகத்தின்கீழ்வரும் பாடசாலை ஆசியர்களுக்கான சங்கீத பயிற்சி வகுபபுக்கள் இராமநாதன் கல்லூரியில் தை22, வைகாசி 08, புரட்டாதி 17-ந்திகதி நடைபெற உள்ளது.

பண்டத்தரிப்புகோட்டக்கல்வி பாடசாலைஆசிரியர்களுக்கான வகுப்புக்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தை 25, வைகாசி 10. புரட்டாதி 06-ந் திகதிகளில் நடைபெறஉள்ளது

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வகுப்புக்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில், தை 15, வைகாசி 07, புரட்டாதி 10-ந் திகதிகளில்நடைபெறவுள்ளது.

வேலணைக் கோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிவகுப்புக்கள் யாழ் சென்ஜோன்ஸ் அக்கடமியில் தை 18, வைகாசி 14, புரட்டாதி 11-ந் திகதிகளில் நடைபெற உள்ளது.

சாவகச்சேரி கோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் தை26, வைகாசி15, புரட்டாதி 20-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. [17]


# நினைவு கூருகின்றோம் 1993-01-15

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில், திருக்கோணமலை - மூதூர் ஈச்சந்தீவுப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

- சுதா (வி. சுதாகரன் - சேனையூர், மூதூர் - திருக்கோணமலை)
- வரதன் (அகிலேசபிள்ளை வரதநாதன் - கடற்கரைச்சேனை, மூதூர்- திருக்கோணமலை)
- தீபன்–கவிஞன் (நா. சந்திரசேகரம் - ஆலங்கேணி, கிண்ணியா, மூதூர், - திருக்கோணமலை)

தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருக்கையில் காணமற்போன

- மைக்கல் (-மைக்கல் லிபோன் - நாவாந்துறை - யாழ்ப்பாணம்)
- வீரா (-வீரகுமார் - நாவாந்துறை - யாழ்ப்பாணம்)
- மோகன் (நாவாந்துறை - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுமி - வாழைச்சேனை, கிண்ணையடியில் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

திருக்கோணமலை -ஆலங்கேணி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின் உப்புப் பாத்திக்குள்ளிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட 2 தமிழர்கள் – புன்னாலைக் கட்டுவன் பகுதியில் உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன.

1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

மேஜர்தும்பன்-மகேந்திரன் (அந்தோனிப்பிள்ளை மரியதுரை - சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு -யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

ஜெயவந்தான் (சிதம்பரப்பிள்ளை குணசிங்கம் - காரைதீவு - அம்பாறை)

மட்டக்களப்பு - குடாவெட்டை, பெருமாவெளி, 9ஆம் கட்டைப் பகுதியில் பொறிவெடியில் சிக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப் ஜனதான் (சித்தாண்டி - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை, டச்சு வீதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

பாமதி (சாந்தி யோசப் - முன்னம்போடி, வெட்டை தோப்பூர்,மூதூர் - திருக்கோணமலை)

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்டசமரில் வீரச்சாவெய்திய-

சந்துரு (மலையப்பன் யோகரட்ணம் - பாரதிபுரம், விசுவமடுக்குளத்தடி - முல்லைத்தீவு)

உக்கிளாஸ் - டக்ளஸ் (சண்முகநாதன் யோகலிங்கம் - இரணைமடுச்சந்தி, பாரதிபுரம் - கிளிநொச்சி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட செங்கலடி 02ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- இக் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-5775]

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடாத்தும்

# ஓவியப் போட்டி

இவ்வருடம் 1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப்பெண்கள் நாளையொட்டி ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

### போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்

1. பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீதான சமூகத்தின் அடக்குமுறைகள். அழுத்தங்கள், இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமையவேண்டும். அதாவதுஇந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக அமையவேண்டும்.
2. சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்களின் யதார்த்த நிலையைப் பிரதிபலிப்பதாக, எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டுவருவதாக, எழுச்சியூட்டுவதாகஅமையவேண்டும்.

### ஏனைய விதிகள்

1. ஓவியங்கள் 28''X22'' (பிறிஸ்ரல்போட் அளவில்) அளவுடையதாக இருக்கவேண்டும்.
2. வர்ண சாதனங்களாகப் பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.
   நீல வர்ணம், மெழுகுச் சோக் வர்ணம், போஸ்ரர்வர்ணம், கலப்புச் சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்.
3. போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களையே போட்டிக்காக அனுப்ப முடியும்.
4. ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம்பெறக் கூடாது. பெயர், முகவரி, பாடசாலை விபரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத்தாளின் பின் புறத்தில் இடவும்.
5. போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 1993-02-20 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பிந்தியதாக வந்து சேரும் ஓவியங்கள் போட்டிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
6. உங்கள் ஆக்கங்களை உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.
7. தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

### மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்

மேற் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவரும் போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப் படைப்புத்தான் என்பதை அதிபர்கள் அல்லது வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடுவித்து உறுதிப்படுத்த வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத் தாளின் பின் பக்கத்தில் செய்யவும்.

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு. மேற்பிரிவு எனத் தனித் தனிப் பிரிவுகளாக நடாத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

[சி-5776]


## விழுதுகள்

நது முதலுதவி பற்றி முழுவதுமாக உள்ளடக்கி ஓர் புத்தகம் எழுதி தனது மாவட்டத்திற்கு தருமாறு கேட்டான். நான் என்றுமே இவனின் வேண்டுகோளை நிராகரித்தது கிடையாது. இவனின் ஆசைகள், வேண்டுகோள்கள், யதார்த்தமானவை. இவனின் ஏக்கங்கள் நியாயமானவை. இவன் இவ் உதவிகள் கேட்டு ஐந்து நாள் மிக அவசரமாக தன் உன்னதபணிகளை விட்டு விட்டு, எம்மையும் விட்டு விட்டு தூரப் போய்விட்டான்.

நான் மன்னாருக்கு இறுதியாக நடந்த தாக்குதலுக்கு போனபோது இவனில்லை. என்னை வரவேற்க. இவன் காட்டிய இடங்கள், இவன் நடந்த இடங்கள் ஆகியன என்னை வெறுமையாக பார்ப்பது போல் உணர்வு. அதிலும் குறிப்பாக குஞ்சுக் குளத்திலுள்ள தொங்கு பாலத்தில் நடந்தபோது இவன் கூட வருவது போல் ஒரு பிரமை ஆனால் இவன்தான் இன்று எம்மிடையே இல்லையேதவிர இவன் வளர்த்து விட்ட இவனின் திறமைகளைக்கொண்ட பல சயந்தன்கள் இவனின் ஆசைகள், எதிர்பார்ப்புகளைச் சுமந்து கொண்டு மருத்துவ சேவையை செய்யத் தொடங்கியுள்ளார்கள். இன்று இவனின் கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இவனது ஆசைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன.

– டாக்டர் அக்கா




இன்று என்னை வளர்த்தவர்கள் வீரச்சாவடையலாம். நாளை நான் வீரச்சாவடையலாம்—ஆனால் எமது இயக்கம் ஒரு போதும் அழியமாட்டாது.

மேஜர் சயந்தன்.

**1992**ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமைகாலைநான்எனதுமுகாமில் உள்ள அலுவலக அறையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மன்னாரிலிருந்து வந்து மருந்துவம் படித்துக் கொண்டிருக்கும் போராளி ஒருவர் எமது முகாமிற்கு வந்து என்னுடன்இருக்கும் ஒரு பிள்ளையிடம்அக்கா நிற்கிறாவோ? என்று கேட்டான். அவனின் குரல் அவன் கேட்ட விதம் பதற்றமாக இருந்தது. இது என் மனதில் ஓர் இனம் தெரியாத கலக்கத்தை ஏற்படுத்தியது எனவே நான் உடனடியாக அறையில் இருந்து வெளிப்பட்டு அவனருகே வந்து "என்ன விசயம் அப்பன்" என்று கலவரத்துடன் கேட்டேன். அவன் ஏற்கனவே நிறைய அழுது இருந்தான். நான் கேட்டவுடன் "அக்கா சயந்தண்ணை வீரச்சாவக்கா" என்று கூறி விட்டு மீண்டும் அழத் தொடங்கி விட்டான். இது...... இது ... எப்படி?...சீச்சீ... இருக்காது... அப்படி இல்லை...எப்படி இவ்வளவு சிக்கிரம்?? என் நெஞ்சு ஒரு கணம் அப்படியே இறுகி விட்டது. எனக்கு வாயில் வார்த்தை வரவில்லை. உடல் பதறிக் கொண்டிருந்தது ஒருவாறு என்னை சுதாகரித்துக் கொண்டு "எப்படியய்யா, இப்பதானே இங்கிருந்து போனான். போய் ஐந்துநாள் கூட ஆகவில்லையே" என்றேன் அதற்கு அவன் "அக்கா சயந்தண்ணை மட்டுமல்ல, வேணு அண்ணை, குகன் அண்ணை குட்டிமணியண்ணை மொத்தம் நாலு பேர். நேற்று வெயிக்கிள் மைன்ஸ் வைக்கேக்கை மிஸ் ஆகிட்டுதாம். அதோட சயந்தண்ணையின் பொடி கூட கிடைக்கவில்லையாம் என்கிறாங்க" என்று கூறி முடித்தான். என்ன கொடுமையிது' ஒன்றாக மன்னாரின் மாமணிகள் நான்கும் இதை எப்படி அவர்கள் தாங்கப் போகிறார்கள். இதில் எங்கட சயந்தனுமா? இனி இவன் தனது புனித சேவையை தொடர்வர மாட்டானா இது உண்மையா? என்னால் இன்னமும் நம்பவே முடியவில்லை. இச்செய்தி பொய்யாக இருக்கக் கூடாதா என்ற ஏக்கம்.

மருத்துவ சேவையில் என்னவென்ன அபிவிருத்திகள் எதிர் காலத்தில் செய்ய வேண்டுமென்று ஐந்து நாட்களுக்கு முன்பு கூட என்னுடன் கலந்தாலோசித்தானே. எதிர்காலத்தில் மன்னாரில் வைத்தே எம் போராளிகளின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் சில சத்திரசிகிச்சைகள் செய்வதற்கு அதற்காக அனுபவம் பெறுவதற்கு நான் படிக்கப் போகிறேன். அதற்கு ஒழுங்கு பண்ணுங்க மீண்டும் விரைவில் வருவேன். என்று கூறிவிட்டு போனானே.இவை அனைத்தையும் விட்டுவிட்டு இவ்வளவு விரைவாக போவான் என்று யார்தான் நம்புவார்கள். யாருக்கு தான் வேதனையிருக்காது இதனால் தானோஎன்னவோ இழப்புகள் பலத்தை தாங்கிய என் இதயம் கூட இவ் இழப்பினால் ஒரு கணம் கனத்தது.

நான் முதல் முதலாக இவனைச் சந்தித்த நிகழ்வு இன்னும் என் மனதில் பசுமையாக நிழலாடுகின்றது 1989-ம் ஆண்டு ஆவணி மாதம் மதுரையில் நான் தங்கியிருந்த காலத்தில் இவன் மன்னாரில் இருந்து காயமடைந்த போராளிகளை மேலதிக விசேட சிகிச்சைக்காக இங்கு கொண்டு வந்திருந்தான். அப்போது ஒரு நாள் என்னிடம் வந்து "அக்கா நாம கொஞ்ச நாளைக்கு இஞ்சை தங்க வேண்டியிருக்கு அதுவரையும் சும்மா நிற்காமல் மெடிக்ஸ்சில் ஏதாவது படிக்க விரும்பிறம். என்னோட இன்னொரு மெடிக்ஸ் றங்கனும்கூட வந்திருக்கிறார். நீங்க எங்க இரண்டு பேருக்கும் ஏதாவது படிப்பியுங்களேன்" என்றான். இதில் ஒரு விசயம் என்னவென்றால் அவர்கள் இருவரும் ஏற்கனவே மருத்துவத்தைப் பற்றி நிறைய தெரிந்தவர்கள். மன்னாரில் காயமடைந்த போராளிகள் பலருக்கு சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்றியவர்கள். அப்படி களத்தில் நின்று நிறைய அனுபவம் பெற்றவர்கள். அப்படியிருந்தும் என்னிடம் வந்து தங்களுக்கு மருத்துவம் படிப்பிக்குமாறு கேட்ட விதம் இவனை என் மனதில் நன்றாக உயர்த்தி விட்டது. அத்துடன் இவனுடன் ஒரு சில மணித்தியாலங்கள் கதைத்ததில் இவனுக்கு மருத்துவ சேவையில் உள்ள பற்றுதலையும், காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றுவதில் இருந்த அக்கறையையும்அத்துடன் தன் மாவட்டத்தில் மருத்துவத்தை எப்படியெல்லாம் விருத்தியடையச் செய்ய வேண்டுமென்ற அவாவையும் எனக்கு எடுத்துக் காட்டியது. இதற்கு நான் உடனடியாகச் சம்மதித்து ஒவ்வொரு நாளும் ஒரு சில மணித்தியாலங்களுக்கு போர்க்காயங்கள் பற்றியும் அவற்றிற்கான முதலுதவி சிகிச்சை போன்றவற்றையும என்னால் இயன்றவரை படிப்பிக்கத் தொடங்கினேன். இப்படி படிப்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் சில சமயம் நான் வைத்தியசாலை வேலைப்பளுவின் நிமித்தம் களைந்து வந்து படுத்து விடுவேன். ஆனால் இவன் விடமாட்டான். நான் வந்து மெதுவாக படுக்கையில் சரியவும். வந்து கதவைத்தட்டி "அக்கா வந்திட்டீங்களா படிக்க வரலாமோ? என்று கேட்பான். இவனின் இத்தகைய அதிதீவிர ஆர்வம் என் களைப்பை ஒரு நொடியில் போக்கி விடும். உடனே நான் எழுந்து வகுப்பு எடுக்கத் தொடங்கி விடுவேன்.

இவன் படிப்பிலும் வேலையிலும் உற்சாகமாக செயல்பட்டாலும் ஓய்வு நேரத்தில் அமைதியை விரும்புவான். மௌனமாக ஏதாவது யோசித்துக் கொண்டிருப்பான். இதை நான் கவனித்து "என்ன அப்பன் யோசனை ஏதாவது பிரச்சினையா? அல்லது ஏதாவது கவலையா? என்று கேட்டால் "சீ அப்படி ஒன்றுமில்லை ஏன் அப்படி கேட்டீங்க" என்று விட்டு புன்னகைப்பான். அப் புன்னகையில் ஒன்றுமே புரியாது. இவன் அதிகம் அலட்ட மாட்டான். நான் பாராட்டினாலும் ஓர் புன்னகை தான். நான் ஏசினாலும் அதே புன்னகை தான் சில சமயம் எனக்கு புத்திமதிகள் கூறுவான் ஆறுதல் கூறுவான் அவ்வேளையில் எனக்கு இவன் மூத்த சகோதரன் ஆக மாறி விடுவான். இவ்வாறு அக்கறையுடன் நான்கு மாதங்கள் படித்து முடித்ததும், இவனுக்கும் றங்கனுக்கும் மன்னார் திரும்ப வேண்டிய காலம் வந்து விட்டது உடனே தாம் மன்னார் போய் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ வேலைத் திட்டத்திற்கு என்னுடன் சேர்ந்து தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை இரவிரவாக பட்டியல் தயாரித்து பின்பு கடைகடையாக ஏறியிறங்கி அவற்றை கொள்வனவு செய்து, அவற்றிற்கு எல்லாம் பொலித்தீன் போட்டு கடற்பயணத்திற்கு ஆயத்தமானான்.

இவன் எம்மையெல்லாம் விட்டுப்பிரியப் போகிறான் என்றவுடன் எனக்கு மட்டுமல்ல என்னுடன் தங்கியிருந்த மற்றைய போராளிகள் அனைவருக்கும் இனம் தெரியாத வேதனை. இதற்குரிய காரணம் என்னவென்றால் இவன் பழகும் விதம் காட்டும்மரிவு மரியாதை. பாசம், பண்பு போன்றவை தான். இவற்றை எந்த காலத்திலும் மறக்க முடியாது. இவற்றையெல்லாம் விட எனக்கு இவனில் பிடித்த குணம் என்னவெனில், நான் மருத்துவ சம்பந்தமாக என் மனதில் பட்ட கருத்துகள், எண்ணங்கள் ஆலோசனைகள் ஏதாவது சொன்னால் அதை ஒருபோதும் மறக்க மாட்டான். அசட்டை செய்யமாட்டான். அக்கறையாக கருதில் எடுத்துக் கொள்வான். பின்பு இவற்றையெல்லாம் பல சந்தர்ப்பங்களில் செயலில் காட்டி வெற்றியும் கண்டுள்ளான்.

இவன் மன்னார் கிளம்பும் நாளன்று வண்டிக்கு போக முதல் என்னுடன் கதைக்கும் போது என்னிடம் ஓர் உதவி கேட்டான். அதை உதவியென்று சொல்வதை விட வேண்டுகோள் என்றே சொல்லலாம். அது என்னவெனில் "அக்கா நாம் இன்று மன்னார் போறம் நீங்கள் படிப்பித்ததை, சொல்லித் தந்ததை நிச்சயமாக செயலில் காட்டுவம்நீங்க தொடர்ந்துஎங்களை மாதிரிப் பிள்ளைகளுக்கு படிப்பிக்க வேணும் என்றோ ஒரு நாள் நாம் தமிழீழத்தைப் பார்க்கும் போது அங்கை காண்கிறஇடமெல்லாம்அக்காவின்பிள்ளைகள்தான்மெடிக்ஸ் செய்ய வேணும். இது என்ரை ஆசை அதோட நீங்க நாட்டுக்கு போனால் எமது தலைவரிடம் அனுமதி பெற்று ஒருக்கா மன்னார்க் காட்டுக்கு வந்து [அப்ப அவர்கள் காட்டு வாழ்க்கை தான்] அங்கை எங்களுக்கு ஒரு மினித்தியேட்டருடன் கூடிய ஓர் மெடிக்ஸ் செற்றப் செய்ய ஆலோசனை தர வேணும். அக்கா நீங்கள் மருந்து சம்பந்தமாக ஏதாவது புதிதாக அறிந்தால், அல்லது மருந்துகளைப் பற்றி புதிய தகவல்கள் கிடைத்தால் ஏதாவது ஆலோசனைகள் தெரிவிக்க வேணும் என்றால் அவற்றையெல்லாம் விளக்கமாக எழுதி என் பெயர் போட்டு மன்னாருக்கு அனுப்பி வையுங்க" என்றான். இன்று வரை நான் இவனின் வேண்டுகோள்களை நிராகரித்தது கிடையாது. தொடர்ந்தும் இவனின் ஆசையை இறுதி மூச்சுவரை செய்யக் காத்திருக்கிறேன்.

நான் இந்தியாவில் இருந்து 90 ம் ஆண்டு எமது மண்ணிற்கு வந்த காலம் தொட்டு இவனுடன் கடிதம் மூலம் தொடர்பு வைத்திருந்தேன். ஆனால் இவனை முதல் முதலாக நேரடியாக சந்தித்தது. சிலாவத்துறை வரலாற்றுச் சமரின் போது தான் அத்தாக்குதலுக்கு நாம் போன போது ஏற்கனவே இவனும் இவனுடன் கூட இருந்த மற்றைய மருத்துவப் போராளிகளும் சகல விதமான ஒழுங்குகளையும் செய்து முடித்திருந்தார்கள். ஒரு களதாக்குதலில் நடவடிக்கைக்கு எப்படி மருத்துவக்குழு தயாராக வேண்டுமோ அப்படி எறுவித குறையுமில்லாமல் தயார்படுத்தி வைத்திருந்தான். இவன் அத்தாக்குதலில் அடம்பனிலுள்ள ஒரு மருத்துவ வீட்டில் என்னுடன் நின்று செயற்பட்டான்.

அங்கு நாம் எம்மிடம் வந்த காயமடைந்தவர்களில் உடனடியாக விசேட சிகிச்சைக்குட்படுத்த வேண்டியவர்களை உடனுக்குடன் வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டு மீதி சிறிய காயம் உள்ளவர்களை வேறு ஒரு மருத்துவ முகாமிற்கு அனுப்பினோம். அடுத்த நாள் காலைதாக்குதல் நின்று விடும் நானும் இவனும் முதல் நாள் இரவு வேறு ஒரு முகாமிற்கு அனுப்பிய சிறிய காயமுள்ளபோராளிகளைபோய்பார்வையிட்டு அங்கு அவர்களுக்கு பூரண சிகிச்சை அளிப்போம். இதில் இவனின் பங்கு கணிசமானது வியக்கத்தக்கது பாராட்டத்தக்கது. இதில் ஒரு நோயாளிக்கு நான் மயக்க மருந்து கொடுத்தால் ஒப்பிறேசன் செய்வான். மற்றைய நோயாளிக்கு "நான் மயக்க மருந்து கொடுக்கிறேன், நீங்க அக்கா ஒப்பிறேசன் செய்யுங்க" என்பான். இதில் இருந்து என்ன விளங்கிறது என்றால் இவன் ஒரே நேரத்தில் சேர்ஜரியையும், அனஸ்தீசியாவையும் படிக்க, பழக விரும்புகிறான். இதற்குரிய காரணத்தையும் இவனே



மேஜர் சயந்தன்

சொன்னான். "அக்கா இப்படி நாம பழகினால் தான் தற்செயலாக நீங்க வரமுடியா விட்டாலும் நாம எங்கட பொடியங்களைக் காப்பாற்றலாம். அதோட அவசரத்துக்கு உதவும்" என்றான்.

நான் இவனைப்பற்றி எழுதிக்கொண்டிருந்த வேளையில் ஒரு மருத்துவக் கருத்தரங்கிற்காக மன்னார் மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் ஜீவன் இங்கு வந்திருந்தார் இவரும் சயந்தனும் 1985-ம் ஆண்டு தொடக்கம் ஒன்றாக செயற்பட்டவர்கள், நான்அவருடன் சயந்தனைப் பற்றி அளவளாவிக்கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் அவர் "அக்கா அவன் மருத்துவத்தில் மட்டுமல்ல வேறும் பல வேலைகளில் திறமைசாலி. உதாரணமாக குறிபார்த்து சுடுவதில், வாகனம் ஓட்டுவதில், ஏன் கண்ணிவெடி வைப்பதில் அவனுக்கு நிகர் அவனேதான். அத்துடன் அவனில் ஒரு பழக்கம் என்னவென்றால் தான் அறிந்ததை மற்றவர்களுக்கு உடனடியாக சொல்லிக்கொடுக்க வேணும் அந்த விடயத்தில் பலரை ஊக்குவித்து முன்னேற்ற வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை உடையவன்" என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில் அவன் பங்குபற்றின தாக்குதல் பலஅவற்றில்:

86-ம் ஆண்டு முற்பகுதியில் மடுறோட்டில் இலங்கை இராணுவத்தின் மீது பதுங்கியிருந்து தாக்கிய தாக்குதலிலும்.

அதேகாலத்தில் கொக்காவில்இலங்கைஇராணுவதொடர் அணிமீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் பங்கு பற்றினான்.

86-ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னார் தீவில் முன்னாள் மன்னார் மாவட்ட தளபதி சாஜகானுடன் இணைந்து ஒருஜீப்வண்டிமீது தாக்குதல் நடத்தினான். இதில் ஜீப் வண்டி முற்றாக சேதமடைந்ததுடன் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின்பு

87-ம் ஆண்டு ஆனி மாதம் பூநகரி கோட்டைத்தாக்குதலிலும்

87-ம் ஆண்டு பிற்பகுதியில் விடத்தல்தீவில் ரெலோ சமூக விரோத கும்பல் மீதான தாக்குதலிலும்.

87 ஆம் ஆண்டு முருங்கன் பிட்டியிலும்.

88ஆம் ஆண்டு அச்சங்குளத்திலும் புளொட் சமூகவிரோத கும்பல் மீதான தாக்குதலிலும் பங்குபற்றினான்.

இவற்றைவிட

88 ஆம் ஆண்டு பெரியமடு - பள்ளமடு வீதியில் சன்னார் என்ற இடத்தில் ரோந்துவந்த இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய குழுவுக்கு தலைமை தாங்கினான். இதில் 6 இராணுவம் கொல்லப்பட்டது.

90 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரலாற்றுச் சமரான கஜவத்தை முகாம் தாக்குதலில் மருத்துவ சேவையைப் பொறுப்பேற்று செயற்படுத்தினான், அதன் பின்பு -

புத்தளம் - சிலாவத்துறை வீதியில் முள்ளிக்குளத்தில் இருந்து சிலாவத்துறைக்கு முன்னேறிய இலங்கை இராணுவத்தின் மீதான தாக்குதலில்மருத்துவசேவை,கண்ணிவெடி வைத்தல் ஆகிய இரு பணிகளையும் ஒரே நேரத்தில் கவனித்தான் என்று கூறி "அக்கா இதன் பிறகு 91ஆம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்ற சிலாவத்துறை தாக்குதலில் தொடங்கி இறுதிவரை அவன் செய்த செயற்பாடுகள் யாவும் உங்களுக்கு தெரியும் தானே" என்றும்சொல்லி முடித்தார்.

ஆம் உண்மைதான் அதன் பின்பு நடைபெற்ற பல தாக்குதல்களிலும் நான் இவனுடன் கூட இருந்தேன். இதில பலராலும் பேசப்படும் பெரிய தம்பனை அடிபாட்டை எடுத்துக் கொண்டால் அத் தாக்குதலில் இவன் மருத்துவ சேவையை மட்டும் செய்யாமல் கண்ணிவெடி வைத்தல், வாகனம் செலுத்துதல் போன்ற பணிகளையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டிருந்தான். இதற்குநான் "ஏன் இப்படி செய்கிறாய் மெடிக்கை விடப் போகிறாயா?" என்று கேட்டால் "இல்லை அக்கா நான் மெடிக்கை விடமாட்டன். ஆனால் நாம நாட்டுக்கு நிறைய செய்யக் கிடக்கு தனிய மெடிக்ஸ் செய்தா காணாது." என்பான் இத் தாக்குதலில்தான்ஒரு சந்தர்ப்பத்தில் லெப். கேணல் ராஜனுக்கு கையில் காயம் அதில இருந்து கடுமையான குருதிப் பெருக்கு. பகல் நேரம் சகடைகள் இரண்டு இடைவிடாது மாறிமாறிகுண்டுகளை கண்டபாட்டுக்கு போட்டுக்கொண்டிருந்தன. சிந்திக்க நேரமில்லை துணிந்து வாகனத்தை எடுத்தான். லெப்.கேணல் ராஜனை ஏற்றினான். வெட்டையூடாக குண்டு மழைக்கு மத்தியில் "எங்கை ஏலுமானால் என்ரை வாகனத்துக்கு குண்டு போடு பாப்பம்" என்ற விதமாக வேகமாக, படு சாமர்த்தியமாக ஆனால் எதுவித பாதிப்போ சேதமோ இல்லாமல் அவரை எம்மிடத்திற்கு கொண்டு வந்து சேர்த்து விட்டான் இந் நிகழ்வை பின்பு சகல பொறுப்பாளர்களும் பாராட்டியதை நான் என் காதால் கேட்டு மகிழ்ந்தேன்.

இறுதியாக இவன் என்னை யாழ்ப்பாணத்தில் வைத்து 1992 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி சந்தித்து கதைத்தான். அப்போதும் மீண்டும் என்னிடம் இரு உதவிகள் கேட்டான். ஒன்று தான் மேலும் சத்திர சிகிச்சை பற்றி படிக்க வேணும். அதற்கு ஒழுங்கு செய்யும்படியும். மற்

[2ஆம் பக்கம் பார்க்க]

## சிறுகதை

பாடசாலை மணி அடிக்கின்றது. மாமர நிழலில் நின்றசைக்கிளை அவசரமாக எடுத்தான் மோகன். அவனுடன் வகுப்பைவிட்டு வெளியேறிய சகமாணவர்கள் அவனின் என்றுமில்லாத அவசரத்தைக் கண்டதும் ''எக்ஸ்பிறஸ்'' என்று கத்தினார்கள். அவன் அதனைக் காதுகளில் விழுத்தாமல் சைக்கிளை வேகமாக மிதிக்கிறான் சைக்கிள் ஒவ்வொருபள்ளம். திட்டிகளும்ஏறிவிழுந்து''கடக்கிட்டி''என்ற ஓசையுடன்செல்கின்றது -- அதனால் அவனுக்கு மணியடிக்கவேணும் என்ற நிலைகளும் ஏற்படவில்லை. அந்தச்சத்தங்களைக் கேட்டு முன்னுக்குச் செல்பவர்கள் தாமாகவே வழியை விட்டுக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

# காலம் மாறவேணும்

**- கருணை - ரவி**

மூன்று மணிக்கு ரியூசனில் ரெஸ்ற். அதில் ' கயஸ்ற் மார்க்'' எடுக்கும் மாணவர்அந்தமாதம் கட்டணம் செலுத்தத்தேவையில்லை. இது அந்த ரியூசன் நடத்துனரால் அறிவிக்கப்பட்டது. மோகன், தான் 'கயஸ்ற் மார்க்' எடுக்கவேணும் என்பதற்காக, இரண்டுமணியிலிருந்து இரண்டரை மணிவரையும் வீட்டில் படித்துவிட்டு ரியூசன் செல்லவேணும் என்பதற்காகத்தான் சைக்கிளை வேகமாக மிதிக்கிறான்.

அவனுக்கு வீட்டின் கஷ்டங்கள் நன்குதெரியும். ஒவ்வொருமாதமும்தனக்குரியூசன்கட்டணம் செலுத்துவதற்கு தகப்பன் பொன்னம்பலம் எவ்வளவு கஷ்டப்படுகின்றார் என்பதனை உணர்ந்துதான், படிப்பிலே அதிக அக்கறை காட்டிவருகின்றான். தனது கல்விக்காகச் செலவிடும்பணத்தையும், கஷ்டங்களையும் நினைத்து. அந்தக் கஷ்டங்கள் தங்களைவிட்டுத் தொலையவேணும்; பெற்றவர்களின் மனங்கள் குளிரவேண்டும்-அதற்காக, தான் கல்வியிலே சிறந்து விளங்கவேணும் என்று எண்ணிக்கொண்டான்.

சீற்றினால் எழும்பி, நாரியை முன்னுக்கு வளைத்து, குனிந்து குனிந்து பெரல்கட்டைகளை உழக்குகின்றான்... ஆடு ஒன்று குறுக்கே பாய்கின்றது. எதிர்பாராத அந்த நிகழ்வால் பதற்றமடைந்தவன் கான்ரிலை ஒருபக்கம் வெட்டினான் முன்சில்லு ஒரு குழியினுள் விழுந்து கிடங்கொன்றில் பாய்கின்றது. மோகன் மூன்று கரணமடித்து விழுந்தான். வெட்கம் கிளைவிட மெதுவாக எழும்பியவன் அங்குமிங்கும் பார்க்கிறான். எவரின் பார்வைகளும் அவனில் படவில்லை காயமேதும் ஏற்படவில்லை. என்பதனை உணர்ந்தவன் உடுப்பில் பிடித்த புழுதிகளை துடைத்துக்கொண்டு சைக்கிளைப் பார்கின்றான்... மூன்று யார் தள்ளி நின்ற சைக்கிளின் கான்டில்ஒரு பக்கம் திருபயியிருந்தது. ''சனியன்'' என பல்லை நெருமிக்கொண்டு விழுந்த கிடங்கைப் பார்க்கிறான். கிடங்கின் விளிம்புகளில் ரத்தக்கறைகள்

அதுதான் நேற்று முன்தினம் பொம்பர்கள் இரண்டு வளைந்து. குண்டுகள் கொட்டின இடங்களில் ஒன்று. புலிகளின் முகாம்கள் தரைமட்டம், பத்துப் புலிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். என்று அரசின் ஊதுகுழலான வானொலி நேற்று அலறிக்கொண்டிருந்த அதேஇடம்! முகாம்கள் என்ற போர்வையில். தெருக்கள்... வீடுகள்.. பாடசாலைகள்... கோயில்கள்... என்று குண்டுகளைக் கொட்டி அப்பாவி உயிர்களை எடுத்துவிட்டு புகழாரம் செய்யும் இனவெறி அரசை நினைக்கும்போது. அவனின்உணர்வுகளை ஏதோ வந்து அரித்தது சைக்கிளை மெதுவாகத் தூக்கி முன்சில்லை தனது இருகால் இடைகளுக்குள் விட்டு, திரும்பிய கான்ரிலை நேராக்கினான்

சைக்கிள் வீட்டுப்படலையைத்தாண்டிஉள்ளே நுழைகின்றது அவனைக்கண்டதும் ''அண்ணா ...'' என்று' ஓடிவந்த சின்னத்தங்கைசைக்கிளைப் பிடித்தாள். மீண்டும் அண்ணா' வன்று சொல்லி வேறு எதையோ உன்ன வாயெடுத்தாள்ஆனால் வார்த்தைகளோ வெளிவரவில்லை விக்கல் மட்டும் தொண்டைக்குழிகளில் வந்து. வந்துபோனது அந்தப் பிஞ்சு முகத்தில் சோகரேகைகள் கோலம் போட்டிருந்ததை உற்றுக்கவனித்தவனின் இதயம் வீங்கி வெடிப்பதுபோலிருந்தது. வீடு ஒரே அமைதியாய் இருக்க ஏதோநடந்துவிட்டதென்பதனை உணர்ந்தவன் ஏக்கச்சுமைகளை நெஞ்சுக்குள் சுமந்து கொண்டு வீட்டுக்குள் நுழைகின்றான்.

அதிர்ச்சிப்புயல் அவனின் இதயத்தை பலமாகத்தாக்கியது. ''அ—அ அப்பா..''என மனதுக்குள் பலமாகக் கத்திக்கொண்டு தகப்பனின் அருகிலே அமர்ந்தான். தகப்பனைச்சூழ தாய் பூரணம், தம்பி, தங்கைகள்...மெதுவாகத் தலையைமிதத்தித் தாயைப் பார்த்தவன் தகப்பனுக்கு என்ன நடந்ததென்பதனைக் கேட்டான்.

குப்பற உறக்கத்தில் கிடந்த கணவனுக்கு நாரியில் நோவெண்ணையைத் தடவி கெண்டைக் கால்களுக்கு ஒத்தணம் கொடுத்துக் கொண்டிருந்த பூரணம், கணவன் கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது, எங்கிருந்தோ வந்த ஷெல் ஒன்று. ஐந்நூறு யார் தூரத்தில் வந்து வெடித்ததும் அந்த அதிர்வினால் ஏங்கியவர் அப்படியே கிணற்றுக்குள் விழுந்ததையும் அதனால் கால்களில் நோவு நடக்க மாட்டார் என்பதனையும் நாரியில் பிடிப்பு என்பதனையும் கூறிக் கேவினாள் மோகனின் விழிகள் ஈரத்தைச் சுமக்க; சிந்தனைத் திரிகை சுழன்றது...

தான் இது வரையும் நினைத்திருந்த கனவுகள், கற்பனைகள் அனைத்தும் அஸ்தமிக்கப் போகின்றது. அவைகள் நிறைவேற வேணுமென்றால் தகப்பன் குணமடைய வேணும். அல்லாவிடில் குடும்பப் பொறுப்பை தான்தான் சுமக்க வேண்டிவரும் என்பதனையும், தான் எதை இழந்தாலும் தனது கல்வியை இழக்கக்கூடாது. அதில்தான் தனது எதிர்காலமே தங்கியிருக்கின்றதென்பதனையும் நினைத்தான்.

விழிகளைத் திறந்த பொன்னம்பலம் வேதனைகள் தாங்கேலாது முனகினார். குப்புறக் கிடந்ததினால் நெஞ்சு நோவ மெதுவாக பின்பக்கம் சரிய எத்தணித்தார் முடியவில்லை. அவரின் நிலையைக் கவனித்த மோகன் வைத்தியசாலைக்குக் கொண்டு போக வேணும் என்பதை தாயிடம் கூறினான்.

வைத்தியசாலைக்கு எப்படி அவரைக் கொண்டு போய்ச் சேர்ப்பது? நடக்கக்கூடியவர் என்றாலும் சைக்கிளில் கொண்டு செல்லலாம். நிமிரவே முடியாத மனுசன். கார்பிடிப்பிலும் இந்த மண்ணெண்ணை விலையில் ஆயிரம்ரூபாவென்றாலும் வேணும் அதற்கவள் எங்கே செல்வது ? இந்த இயலாமை நிலையை மகனுக்குக் கூறி இமைகளின் ஈரத்தை முந்தானையால் துடைத்துக் கொள்கின்றாள்.

விடிகின்றது... பொன்னம்பலம் நாரியை மிதத்தி எழும்ப முடியாது. இயற்கையின் உபாதைகளால் துடிக்கின்றார். தாயோடு மோகனும் சேர்ந்து அவரை மெதுவாகத் தூக்குகின்றனர்...

''எப்படி வைத்தியசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது ..? நெஞ்சுக்குள் அடக்க முடியாது புதைத்து வைத்திருந்த வேதனைகள் அவளை அறியாமலே கண்ணீர்களாகவே இமைமடைகளால் உடைத்துப்பாய, படலையை வெறித்துப் பார்க்கின்றாள் அப்போது வண்டில் ஒன்று படலை வழியால் செல்கின்றது .. ஓடிப் போய் அதனைப் பார்த்தாள். பொன்னம்பலத்துக்கு ஒட்டான பரமசிவம் வண்டியை ஓட்டிச் செல்கின்றார் மென்மையான மகிழ்ச்சி முகத்தில் பூக்க அவரை இடைமறித்து விசயத்தைக் கூறினாள்.

துன்பம் வரும் வேளைகளில் தூக்கிவிடுவது தானே சினேகிதப் பண்பு?

பொன்னம்பலத்தைச் சுமந்து கொண்டு வண்டில் விரைகின்றது. .. இன்றைய சூழ்நிலையில் தமிழனின் வாகனம் இந்த வண்டில் ஒன்றே! அதுவும் இல்லாவிட்டால் அவனின் பயணம்...?

பொன்னம்பலத்தை வைத்தியசாலையில் மறித்து மூன்று நாட்களாகின்றன காலில் சிறு முறிவு! ஒப்பறேசன் செய்யவேணும் அதற்கு ''விற்றோ கேன்'' என்கிற விறைபபூசி மருந்து அங்கே இல்லை. அதனால் ஒப்பறேசன் செய்யாமல் மட்டை வைத்து ''பன்டெக்ஸ்'' சுற்றிக் கட்டிவிடப்பட்டிருநதது அத்துடன் நாரிப் பிடிப்பை நீக்குவதற்கு ''பியூட்டா சேல்டின்'' குளிசையிலிருந்து ''இன்டோசிற்'' வரையிலும் எந்த மருந்துகளும் இல்லை டொக்டர். பொன்னம்பலத்தை வந்து பார்வையிட்டு ஒருமருந்தின் பெயரை எழுதிக் கொடுத்தார். வெளிக்கடையில் வாங்கிவரும்படி. மோகன் அவசரஅவசரமாக வீட்டுக்கு வந்து, தாயிடம் காசு கேட்டான் மருந்து வாங்குவதற்கு.

''ஆஸ்பத்திரி எண்டு உது என்னத்துக்குக் கிடக்குது? எதுக்கெடுத்தாலும் துண்டுகள் தானே எழுதித் தாறாங்கள் — வாற மருந்துகளை உங்கை விழுங்கினமே...?'' அறியாமையினால் அவள் வைத்தியசாலையின் மேல் எரிந்துவிழுந்தாள்.

மருந்துகள் இருந்தால்தானே அவர்களும் தாறது? பொருளாதாரத்தடை என்ற காரணத்தை வைத்து அவர்கள் எந்தெந்த வழிகளாலை தமிழர்களை அழித்துக்கொண்டு வருகின்றார்கள்... போராளிகளுக்குத் தேவையான பொருட்கள் மாத்திரமே தடை என்று உலகுக்குக் கூறிக் கொண்டு, இங்கே பனடோலில் இருந்து பஞ்சுகள் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பொருட்களை தர மறுக்கின்றார்கள். பள்ளிக்குத் துள்ளியோடும் பிஞ்சுகளும், இங்கே படிக்கப் புத்தகமல்ல பிடிக்கத் துப்பாக்கிகள் தான் கேட்கின்றனர். இந்த நிலை இதனால் தானே உருவானது. அவனின் சிந்தனைகள் பலமாதிரிச்சுழர, அதனைத் தாய்க்குக் கூறி அவளின் அறியாமை என்ற இருளை அகற்றினான்.

பூரணம், கலங்கிய கண்ணோடு சீலைத்தலப்பில் முடிந்து வைத்திருந்த நூறு ரூபாவை அவிட்டு அவனிடம்கொடுத்தாள். அவன் அதனை வாங்கிக்கொண்டு மருந்துக்கடைக்குச் செல்கின்றான். அங்கே அவன் வாங்கச் சென்ற மருந்து (பில்ஸ்) இல்லை. ஏமாற்றத்துடன் சைக்கிளை எடுத்து வேறுகடைக்குச் செல்கிறான் ..... அந்தக் கடைக்காரரும் தங்களிடம் அது இல்லை என்று கூறி. வேறொருகடையைக்காட்டி, அங்கிருக்கின்றதென்று கூறுகின்றார்.

அவர் காட்டின அதே கடைதான் அவன் முதல் சென்ற கடை! அதனை அவருக்குத் தெரியப்படுத்தினான்.

''உது, வெள்ளன அங்கை இருந்தது தம்பி ....'' தலையை சொறிந்து கூறியவர் எதனையோ யோசித்துக் கொண்டு

''தட்டுப்பாடு எண்டவுடனை தம்பி பதுக்கிப் போட்டாங்கள்...... அதோடை இந்தபில்ஸ் நெருப்பு விலை......'' என வார்த்தைகளை இழுத்துக் கூறினார். ஆனால், இருவரும் பதுக்கி வைத்துக்கொண்டுதான் மற்றைய கடைகளை சாடுகின்றார் என்பதனை மோகன் உணராமல் இருக்கவில்லை. இவைகள் விலைகளை கூட்டி விற்பதற்கு ஒரு வியாபாரத்தந்திரம்! என்பதனை அறிந்தவன், எப்படியேனும் அந்த மருந்தை வாங்கி தகப்பனைக் குணமடையச் செய்து, தான்கல்வியைத்தொடரவேணும் என்பதற்காக- தங்கள் நிலைமைகளை கடைக்காரருக்குக் கூறிக் கெஞ்சினான் அவனின் பரிதாபத்துக்கு இரங்கியோ தெரியவில்லை போத்தல்களுக்குள் இருந்த குளிசைகளில் சிலதை எடுத்து அவனிடம் நீட்டி முந்நூறு ரூபா தரும்படி கேட்டார். அதனை வாங்க நீட்டிய அவனின் கரம் தானாகவே கீழே பதிந்து கொண்டது.

''முந்நூறு ரூபாய் ...... முந்நூறு ரூபா...... அதுக்கெங்கே போறது... '' நினைவுகள் கலங்கிய குளமாகின்றது. ஆக்கிரமிப்பு அனல் வீச்சுக்களாலும். பொருளாதாரத்தடைகளாலும் எமது தேசம் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், பதுக்கல்களாலும். கட்டுப்பாடற்ற விலையேற்றங்களாலும் எங்களை நாமே அழிக்கும் நிலைகளை எண்ணி நொந்து கொண்டு சைக்கிளை எடுக்கிறான். சைக்கிள் படலையைத் தாண்டி உள்ளே செல்கிறது. தங்கை ஓடிவந்து கூறுகின்றாள். தாய், தகப்பனுக்கு சாப்பாடு கொண்டு போனதாக! சைக்கிளைத் திருப்புகிறான்......

பொன்னம்பலம், ஆட்டம் அசைவின்றி நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்றார். அவரின் அருகிலே பூரணம். சோகப் பனிகளால் துவண்டு கொண்டு மோகன் வருகின்றான்...... அவனைக்கண்டதும் அவளின் முகத்தில் சற்று நிம்மதி! மெதுவாக எழும்பியவள்

''வாங்கிப் போட்டியே......?'' ஆவலோடு கேட்டாள். இல்லை என்பதற்குப் பதிலாக தலையை அசைத்தவன் மருந்துக்கு அலைந்து திரிந்ததையும், அதன் விலை முந்நூறு ரூபா என்பதனையும் கூறினான். எழுந்த நிம்மதி மறுபடியும் அவளின் மனதுக்குள் புதைந்து கொண்டது. இருந்த நூறு ரூபாவை திரட்டுவதற்கு அவள் அலைந்த அலைச்சல். மீண்டும் முந்நூறு ரூபாவை திரட்ட அலைவதென்றால்... பூரணம் யாரிடம் போய் கெஞ்சுவதென சிந்தனைகளை வீசிக்கொண்டிருந்தாள்.

''ஆ ..... ஐயோ... .. என்னாலை தாங்கேலாதாம்! நாரியெல்லாம் வலிக்குது பூரணம்...... மாத்த மருந்தில்லாட்டி நஞ்சையென்டாலும் தா......''

வேதனைகள் தாங்கேலாது சுடுமணலில் நெளியும் புழுபோல் துடித்துக் கொண்டிருக்கும் கணவனைப் பார்க்கும் போது உள்ளம் எலலாம் உருகி. உதிரமாக விழிகள் வழியேகண்ணீர் வெள்ளம்பாய வெறிபிடித்தவள் போல் விழிகளை அகட்டிய பூரணம்

''அரிசியில்லை மாவில்லை; எண்ணையில்லை கரண்டில்லை; வருத்தம் மாத்தமருந்துகளில்லை. உவங்கடை ஆட்சிமட்டும் இஞ்சை என்னத்துக்கு...?''

என்று உரத்துக் கத்தினாள் தன்னையே மறந்து. அந்தச் சத்தத்தில் வைத்தியசாலையே ஒரு கணம் அதிர்ந்தது!

மோகன் மௌனமாக நின்று, தாயின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடுகளை நெஞ்சறைகளில் நிறுத்தி, அந்த வரிகளையே திரும்பத் திரும்ப அசைபோட - அவனை அறியாமலே ஓர் உணர்வு! அந்த உணர்வு, தான் படிக்கவேணும், வாழவேணும் என்ற சுயநலக் கொப்புக்களையெல்லாம் தறித்து விழுத்தி, இந்தக்காலம் மாறவேணும்எனபதனைஅவனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது.

# தலைவர் பிரபாகரனும் அங்கிலிக்கன் ஆயரும்

தலைவர் பிரபாகரனை நேரில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுமென அவர் எதிர்பார்க்கவில்லைப் போலும். அதனால் தான் என்னவோ தலைவரை நேரில் சந்தித்தபொழுது அங்கிலிக்கன் ஆயர் தனது ஆச்சரியத்தை வார்த்தைகளில் வடித்து விட்டார்.

''நீங்கள்தான் உண்மையில் பிரபாகரனா? அல்லது பிரபாகரனின் ஆவிதான் இங்கு காட்சி தருகிறதா?'' என்றார்.

இது ஆவி உலகம் இல்லை என்பதுபோல தலைவர் பிரபாகரனும், அங்கிருந்தவர்களும் சிரித்தார்கள்.

''பிரபாகரன் பற்றி எத்தனையோ புரளிக் கதைகளையும், பொய்களையும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் திரித்துவிடுகிறார்கள் பிரபாகரன் உயிருடன் இல்லை என்பதும் இப்படியான ஒரு கட்டுக்கதை'' என்று கொழும்பு ஆயர் விளக்கம் கூறினார்.

சிங்கள தேசம் எத்தகைய மாயையில் வாழ்ந்து வருகிறது என்பதை நன்கு புரிந்து கொண்டவர்போல தலைவர் மெல்லிய புன்முறுவலுடன் தலையசைத்தார்.

அன்றைய சந்திப்பு வரலாற்றில் பதிந்த ஒரு நிகழ்வு.

மூன்று முக்கிய திருச்சபைகளின் ஆயர்களும் அவர்களது பிரதிநிதிகளும் ஒன்றாகக் கலந்து கொண்டது இந்நிகழ்வின்சிறப்பம்சமாக அமைந்தது.

ஆங்கில திருச்சபையின் ஆயர் கிளாலிக் கடலில் பௌத்த தர்மத்தின் காருணியத்தை நேரில் தரிசித்து வந்திருக்கிறார். தலைவர் பிரபாகரனின் அரசியல் நாடியைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்பதும் அவரது ஆவல். மற்றைய இருவரும் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டவர்கள். குடாநாட்டு மக்கள் சுமக்கும் துன்பச் சிலுவையின் பளுவை நன்கறிந்தவர்கள். இவர்கள் மூவரும் தலைவரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடிய இச்சம்பவம் விசேடமானது.

''நேரில் வந்து நிலைமையைக் கண்டறியும் பொழுதுதான் உண்மை புரிகிறது. எதார்த்தம் விளங்குகிறது. மக்களின் அவலங்களையும், ஏக்கங்களையும் உணர முடிகிறது. தமிழர் வாழும் உலகத்தை, அவர்களது வாழ்வு நிலை உண்மைகளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை'' என்று ஆரம்பித்த அங்கிலிக்கன் ஆயர், சிங்கள தேசத்தில் ஒரு பெரிய மனமாற்றம் ஏற்பட்டு வருவதாகக் கூறினார்.

''சிங்கள மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள். தமிழர் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட விரும்புகிறார்கள். இதனால் சிங்களவரிடையே சிந்தனை மாற்றம் தோன்றியிருக்கிறது. சமஷ்டிக் கோட்பாடு பற்றி சிந்திக்கும் அளவிற்கு ஒரு முற்போக்கான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது'' என்று உடனடியாகவே அரசியல் உலகத்தில் பிரவேசித்தார் அங்கிலிக்கன் ஆயர்.

''சமஷ்டி அமைப்பு முறை ஒரு புதிய சிந்தனையோட்டம். இது பாராளுமன்ற தெரிவுக் குழுவில்தான் உருவாக்கம் பெற்றது. முக்கிய சிங்களக் கட்சிகள் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டமை ஒரு பெரிய அரசியல் திருப்பத்தைச் சுட்டிக் காட்டுகிறது அல்லவா?'' என்று கூறிய ஆயர் தலைவர் பிரபாகரனைக் கேள்விக்குறியுடன பார்த்தார்.

தலைவர் மிகவும் நிதானமாகப் பதிலளித்தார்.

''சமஷ்டிக் கோட்பாடு தமிழ் அரசியலுக்கு புதிய விடயமல்ல. சமஷ்டி என்ற கோசத்தின் அடிப்படையில் தமிழர் தாயகம் இரு மாகாணங்களாகப் பிரிக்கப்படுவதை கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் குழுக்களே வன்மையாக எதிர்க்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். எம்மைப் பொறுத்தவரை தாயகக் கோட்பாடு தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அடிப்படையானது. தமிழ்த் தாயகத்தைக் கூறுபோடும் எந்தவொரு திட்டத்தையும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கப் போவதில்லை'' என்று விளக்கினார் தலைவர் பிரபாகரன்.

தெரிவுக் குழுவின் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிய சிக்கலான சர்ச்சையை இந்தச் சந்திப்பில் தவிர்ப்பது நல்லது என புலிகள் தரப்பில் கூறப்பட்ட யோசனையை சகலரும் ஏற்றுக் கொண்டனர். தெரிவுக் குழுவின் தீர்க்கமான முடிவு இன்னும் தெரியவில்லை. அப்படியிருக்க, உத்தேச திட்டங்கள் பற்றி விவாதிப்பதில் பயனில்லை. தமிழ் மக்களைப் பாதிக்கும் பொதுப் பிரச்சினைகள் பற்றியும், சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கான வழிவகைகள் பற்றியும் கலந்துரையாடுவது பொருத்தமானது என எல்லோரும் இணங்கியதை அடுத்து கிளாலி விவகாரம் பற்றி பேசப்பட்டது.



''அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் இராணுவத்தின் அட்டூழியங்களையும் உன்னிப்பாக கவனித்தால் ஒரு உண்மை புலனாகும். அதாவது, இந்த யுத்தம் எமது மக்களுக்கு எதிராகவே ஏவி விடப்படுகிறது. கிளாலிப் பாதை விவகாரம் இதற்கு நல்ல உதாரணம். போக்குவரத்துப் பாதைகளைத் தடை செய்து குடாநாடு மீது திணிக்கப்பட்டுள்ள முற்றுகை பொதுமக்களையே பெரிதும் பாதிக்கிறது. குடாநாட்டுப்பாதைகளை தடை செய்ததால் விடுதலைப் புலிகளின் நகர்வுகள், போக்குவரத்துகள் எவ்வகையிலும் பாதிப்பிற்கு உள்ளாகவில்லை. ஆனால் மக்கள்தான் பெரும் துன்பத்திற்கும் அவலத்திற்கும் ஆளாகியுள்ளார்கள். எனவே, இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே திட்டமிட்டு நடத்தப்படுகின்றது.'' என்று விளக்கினார் தலைவர் பிரபாகரன்.

''போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராக திருப்பி விட்டு, மக்கள் மீது தாங்கொணா துன்பப் பளுவை சுமத்தி, மக்களை புலிகள் இயக்கத்திற்கு எதிராக மாற்றிவிடலாமென அரசு திட்டமிட்டு செயற்படுகிறது. குடாநாட்டு முற்றுகையும், பாதைத் தடைகளும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களும் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நடவடிக்கைகளால் எமது மக்கள் அரசு மீது வெறுப்பும் ஆத்திரமும் அடைந்து வருகிறார்கள்'' என்றார் தலைவர்.

குடாநாட்டு மக்களின் அவலநிலைபற்றி ஏனைய திருச்சபைகளின் ஆயர்களும் குருவானவர்களும் எடுத்து விளக்கினார்கள். இந்தக் கலந்துரையாடலை அடுத்து ஆயர்களை தனித்தனியே சந்தித்துப் பேசினார் தலைவர்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றி அங்கிலிக்கன் ஆயரிடம் தலைவர் கூறியதாவது;

''அரசியல் தீர்வு நோக்கிய பாதைக்கு முதற்படியாக சமாதான சூழல் அவசியம். பரஸ்பர நல்லெண்ணம் அவசியம். ஆனால் அரசாங்கமோ ராணுவ நெருக்குதலையும், பொருளாதார நெருக்கடியையும் எமது மக்கள் மீது திணித்தபடி தீர்வுத்திட்டங்கள் பற்றி ஆராய்ச்சிகளை நடத்துகிறது. போரைத் தொடர்ந்தபடி பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புகிறது. இந்த அணுகுமுறை நியாயமானதல்ல. நடைமுறைச் சாத்தியமானதும் அல்ல.

''அரசாங்கம் உண்மையில் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்பினால் மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் சில நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளலாம் அல்லவா? போக்கு வரத்துப் பாதைகளுக்கு தடைபோடுவது ஒரு அநீதியான செயல். மிகவும் சிரமத்துடன்அப்பாதையூடாக பயணம் செய்பவர்களைபடுகொலைசெய்வது மிகவும் கொடுமையானது. இந்த அட்டூழியங்களை நிறுத்தி பூநகரிப் பாதையை அரசு திறந்துவிட வேண்டும். பூநகரியிலிருந்து இராணுவத்தை விலக்கிக்கொண்டு மக்கள் பாதுகாப்பாகப் போக்கு வரத்துச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்தால் என்ன? சமாதானத்திற்கு வழியமைக்கும் நல்லெண்ண முயற்சியாக இதனை அரசு செய்யலாம் அல்லவா?'' என்று கூறினார் பிரபாகரன்.

''போர் நிறுத்தம் செய்து சமாதான சூழலை உருவாக்க அரசு தயங்குகிறது என்பது உண்மை. ஏனென்றால் இந்தப் போர் ஓய்வு இடைவெளியைப் பயன்படுத்தி நீங்கள் உங்களை ஆயுத ரீதியில் பலப்படுத்திக் கொள்ளலாம் என அரச வட்டாரங்களில் சந்தேகம் நிலவுகிறது.'' என்றார் ஆயர்.

''நாம் ஆயுதப் படைகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தே எம்மைப் பலப்படுத்திக் கொள்கின்றோம். இந்த வகையில் போர் ஓய்வு எமக்கு இராணுவ ரீதியில் அனுகூலமானது என எண்ணுவது தவறு. அரசுக்குத்தான் இது அனுகூலமாக அமையலாம். தொடர்ந்தும் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை தருவித்து தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவே செய்யும். போர் தொடர்ந்தாலும், போர் நிறுத்தப்பட்டாலும் அரசு தனது இராணுவ இயந்திரத்தை பலப்படுத்தவே முயற்சிக்கும். இதனை யாராலும் தடுக்க முடியாது'' என்று பதிலளித்தார் பிரபாகரன்.

''அரசாங்கம் நல்லெண்ணம் காட்டவேண்டுமென கூறுகிறீர்கள். ஆனால் நீங்கள் முதலில் ஒரு நல்லெண்ண முயற்சியை மேற்கொண்டால் என்ன?'' என்று கேட்டார் அங்கிலிக்கன் ஆயர்.

''என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்'' என்றார் பிரபாகரன்.

''உங்களின் பாதுகாப்பிலுள்ள ஒரு சில யுத்தக் கைதிகளை விடுதலை செய்வீர்களா? அரசினதும், சிங்கள மக்களினதும் நல்லெண்ணத்தைப் பெற இது பெரிதும் உதவும்'' என்றார் ஆயர்.

''நாளைக்கே இரண்டு போர்க் கைதிகளை விடுதலை செய்கிறேன். உங்களிடமே அவர்களை ஒப்படைத்து விடுகிறேன். நீங்கள் கொழும்பு திரும்பும்போது அவர்களை அழைத்துச் செல்லலாம்'' என்றார் தலைவர்.

**அன்ரன் பாலசிங்கம்**

ஆச்சரியத்தில் அதிர்ந்து போனார் ஆயர். ''உங்கள் கருணை உள்ளத்தைப் பாராட்டுகிறேன். இது சமாதானத்திற்குக் கிடைத்த வெற்றி'', என மகிழ்ச்சி பொங்கக் கூறினார் ஆயர்.

''சிங்கள தேசத்திலிருந்து சமாதான தூதுவர்களாக யாழ்ப்பாணம் வர விரும்புபவர்களை அனுமதிப்பீர்களா? நான் அடுத்த தடவை வரும்பொழுது சில முக்கிய பௌத்த குருமாரையும். புத்திஜீவிகளையும் அழைத்து வர விரும்புகிறேன்?'' எனக் கேட்டார் ஆயர்.

''நிச்சயமாக எமது சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன'', என்று சிரித்தபடி கூறினார் தலைவர். ஆயர் தனது உளம் கனிந்த நன்றியை தெரிவித்தார்.

அன்றைய சந்திப்பு இனிதே முடிந்தது.

மறுநாள், இரு சமாதானப் புறாக்கள் சிறைக்கூட்டிலிருந்து சுதந்திரமாக வெளியே பறந்தன. அதே நாள், இரு போர்க் கழுகுகள் மட்டுவில் கிராமம் மீது ராட்சதக் குண்டுகளை வீசிவிட்டுச் சென்றன.

# மனம் மாறும், அணுகுமுறை மாறும்;

அருட் கலாநிதி றியன்ஸி பெரேரா இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் இணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவர். மனிதநேயப் பணிகளில் ஆர்வமுள்ள வண. றியன்ஸி யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும் என்ற தீவிரத்தால் கிளாலிக் கடல் பரப்பு வழியாக இங்கு வந்துள்ளார் கொழும்பு அங்கிலிக்கன் ஆயருடன் யாழ்ப்பாணம் வந்திருக்கும் அவர், ஈழநாதத்துக்கு வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகிறது. -சந்திப்பு மதன்

★கன்ரபெரி அதிமேற்றிராணியார் கொழும்பு வந்த சமயம் அவர் யாழ்ப்பாணப் பயணத்தை அரசு அனுமதிக்கவில்லை. கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோவும், நீங்களும் கூட்டுப்படை நடவடிக்கைச் செயலகத்தின் (ஜே.ஓ சி)தடைகளையும் மீறி யாழ்ப்பாணம் வந்ததில் ஏதாவது உள்ளார்ந்தம் அல்லது அரசுடன்ஒத்துப் போகும்தன்மை உள்ளதா?

எமது யாழ்ப்பாண விஜயத்துக்கு ஜே. ஓ. சி ஒன்றும் தடை விதிக்கவில்லை. கிளாலிக்கடல்நீர் ஏரியில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கை, மற்றும் பாதுகாப்பு குறித்து ஜே ஓ சி பொதுப் படையான ஆலோசனை எமக்குக் கூறியிருந்தது. இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற நிர்வாக சபைக்கூட்டங்களில் வடக்கிலிருந்து பலர் கலந்து கொள்வார்கள் நான் குருத்துவக் கல்லூரியில் கடமையாற்றிய போது என்னிடம் இறையியல் கற்றவர்களும் யாழ்ப்பாணத்தில் திருச்சபைப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் இப்படிப் பட்டவர்களின் வேண்டுகோளைத் திருப்தி செய்ய வேண்டியது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நியதி. அவர்கள் விருப்பத்தைப் புறக்கணிக்காமல் திருச்சபை நண்பர்கள், நிறுவனங்கள் என்ற அடிப்படையை அனுசரித்து நாம் யாழ்ப்பாணம் வந்துள்ளோம். இலங்கை எங்கள் எல்லோரினதும் நாடு. அதனால்தான் இங்கு வரக்கூடியதாக இருந்தது. மற்றும்படி, இங்கிலாந்தின்வரலாற்றுச் சூழ்நிலையில்மாட்சிமை தங்கிய மகாராணிக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

# 45ஆவது நினைவு நாள்



| தாயின் மடியில் | தாயக மீட்பில் |
| --- | --- |
| 27 – 12 – 1973 | 02 – 12 – 1992 |

## லெப்டினன்ட் ஜெயா

( சண்முகராசா சிவகுமார் [தயா] )

செந்தமிழ் ஈழத்தின் சீர்கொண்ட அரியாலையில்
சிறப்போடு உதித்திட்ட சிவகுமாரை நினைவு கூர்வோம்
சிப்பிக்குள் முத்தெனச் சிவகுமாரா நீ பிறந்தாய்
சிங்களக் கூலிகளின் முகாம் அழிப்பில் நீ மறைந்தாய்
வன்னியின் எல்லையிலே வஞ்சகர் கூட்டமது
வந்து விடுமென்று நீ காவலில் நின்றாய்
வைத்தவிழி நீக்காது நீ புரிந்த சமரில்
வஞ்சம் கொண்ட சிங்களவன் பறித்துவிட்டான் உன் உயிரை
வஞ்சனையால் உனது உயிர் பிரிந்துவிட்டாலும், உன்புகழ்
வாடாத மல்லிகையாய் மணம் வீசும் எந்நாளும்
துள்ளித் திரிந்த பள்ளிப்பருவமதில்
தேசத்தின் துயர் துடைக்கத் துணிந்திட்ட
லெப்டினன்ட் ஜெயாவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

15. 01. 93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் உபசரணையில போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா அண்ணன்மார், அக்கா
இல:8 சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

(3987)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## வீரவேங்கை சரோஜன்

(சிதம்பரநாதன் சிவநேசன்)
[மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி]

| தாயின் மடியில் வீரஜனனம்: | தாயக மண்ணில் வீரச்சாவு: |
| --- | --- |
| 14-06-1973 | 02-12-1992 |

வன்னி எல்லையில் கந்துறுவெல, வீரவெல இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரகாவியம் படைத்தவர்

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, தம்பி
இரணைமடு,
கிளிநொச்சி.

(3990)

## மனம் மாறும்

அடுத்த இடம் கன்ரபெரி அதி மேற்றிராணியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது அவரின் கொழும்பு விஜயம் ஒரு ஆன்மீகப் பயணம். வண. கெனத் பெர்னாண்டோ வைஆயராகத் திருநிலைப் படுத்தும் வைபவத்தில் கலந்து கொள்ள வருகை தந்தார். வெளிப்பார்வைக்கு அவர் ஒருமடாதிபதி போல் படுகிறாரோ என்னவோ சிறிலங்கா அரசு அவருக்கு ராஜரீக முறையில் மெய்ப் பாதுகாப்புவழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அவருக்கு வழங்கப் பட்ட பாதுகாப்பை அப்படியே வடக்கிற்கும் விஸ்தரிக்க முடியாதசிக்கலில்அரசு அவரின் வடபகுதி விஜயத்தை அங்கீகரிக்கவில்லை.

★ இலங்கைத் தமிழருடன் ஒப்பிடுகையில் தெற்கில் அங்கிலிக்கன் திருச்சபையினர்சிறுபான்மையினர் அவ்வாறிருக்க அங்கிலிக்கன் திருச்சபை இனப் பிரச்சினை குறித்து சிங்களவர் மத்தியில் வலுவான மனமாற்றத்தை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதுகிறீகளா? மனமாற்றத்தைஉண்டுபண்ண முடியுமானால், எவ்வாறு செயற்பட உத்தேசித்துள்ளீர்கள்?

அங்கிலிக்கன் திருச்சபை சிறுபான்மைச் சமயம் என்பதல்ல முக்கியம் நான்ஒருசிறிலங்கன். அங்கிலிக்கன்கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக இருக்கலாம். நான்ஒரு சிங்களவன் என்ற வகையில் சிங்களச் சகோதரர்கள் மத்தியில் யுத்தத்தின் அனர்த்தங்களை எடுத்துக்கூற முடியும். தென்பகுதியில் பல்வேறு கருத்துக்கள்கொண்ட மக்கள் வாழ்கின்றனர் சிங்கள மக்களுடன் கலந்துபேசி உறவாடி அவர்கள் மனதை மாற்றி அமைக்க முடிகிறது. அந்த வகையில் நான் முன்னேற்றம் கண்டுள்ளேன். சிங்களவரை நாம் அணுக முற்படும்போதெல்லாம் நாம் மதமாற்றம் செய்ய முற்படுவதாக பெரிதுபடுத்துகிறார்கள். ஆகவே பொதுப் பிரச்சினைகளில் பௌத்த சங்கத்தினருடன்இணைந்து, அவர்கள் ஊடாகச்செயற்படுகிறேன் அது கைமேல் பலன் தந்துள்ளது. வண சேபித்த தேரோ சர்வ மத அமைப்பிலும் இருக்கிறார். இனவாத இயக்கமான ஹெல உறுமயவிலும் அவருக்கு ஈடுபாடுஉண்டு எங்களுடன் உறவாடியதனால் அவர் குரல் மாறிவருகிறது. ஜே.வி. பி.எழுச்சிதீவிரமாக இருந்தபோது நான் பத்தேகமவில் பணியாற்றினேன். கொடூரம் அங்கு நிலவியது. மனித வாழ்வின் அவலங்களைச் சந்தித்தவன் நான். ஆனால் வடக்கிலுள்ள மக்களைப்போல் கடும்சிரமங்களுக்கு ஆளாகியிருக்கும் கொடுமை அப்போது தெற்கில் நிலவவில்லை. சமாதானத்துக்குப் பணியாற்றுவது ஒரு மதகுருவின்சேவை போருக்கு. புரட்சிக்கு,இராணுவத்துக்கு ஆள் திரட்டுகிறார்கள். நான் சமாதானத்துக்கும், நீதிக்கும்மக்களைத் திரட்டிவருகிறேன் மக்களின் மனப்பாங்குமாறும் அணுகுமுறை மாறும்;

★ தெற்கில் றோமன் கத்தோலிக்க திருச்சபை கோயில் பற்றுகள் தோறும் சமாதானக் குழுக்களை அமைத்திருப்பதாகத் தெரிய வருகிறது அதே போன்று அங்கிலிக்கன் திருச்சபையும் சமாதான உணர்வைப் பொருளாகக் கொண்டு யுத்த எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

தென் பகுதி மக்களும் நெருக்கடியான சூழ்நிலை மத்தியில் வாழ்க்கைச் செலவைச் சுமக்க முடியாமல் களைத்துப் போய் உள்ளார்கள். அரசியல் வாதிகள் மேல் மக்கள் வைத்திருந்த நம்பகத் தன்மை குறைந்து வருகிறது. மத்திய மலைநாட்டிற்கும் (கண்டி) தென் பகுதி (கரையோரப்பகுதி) க்குமிடையில் ஏற்றத்தாழ்வுகளை அவதானிக்க முடிகிறது கண்டி பேருந்து நிலையத்தையும், காலி பேருந்து நிலையத்தையும் ஒப்பிட்டால் காலி எத்தனையோ வருடங்கள் பின்னால் நிற்கிறது. காலிக்கு அப்பால் நல்ல பாடசாலைகள் இல்லை கரையோரக் கிராமங்களில் பொருளாதாரம் தேங்கிப் போய்உள்ளது. மல்வத்த , அஸ்கிரிய பீடங்களின் செல்வாக்கால் மத்திய மலை நாடு வளர்கிறது. தெற்குத் தேங்குகிறது இடபோது பொருளாதாரப் பின்னடைவு மற்

[7ஆம் பக்கம் பார்க்க]

# அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடாத்தும்

# இலக்கியப் போட்டி

1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு இலக்கியப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. எழுத்தார்வம்மிக்க அனைவரும் வயது வேறுபாடின்றி இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

1) கவிதை
2) சிறுகதை

இப்போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் பெண் விடுதலையை முன்னெடுக்கும் நோக்கில் அமையவேண்டும். காலங்காலமாகப் பெண்ணினத்தின்மீது திணிக்கப் படும். சமூக அடக்குமுறை வடிவங்களால் மட்டுமல்லாது ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறைகளாலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழப் பெண்களின் அவல நிலைகளையும், உள்ளக் கிடக்கைகளையும் வெளிக்காட்டும் விதத்தில் படைப்புக்கள் படைக்கபபட வேண்டும்.

எமக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில்மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ, தட்டச்சில் பொறிக்கப்பட்டோ, ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியப்போட்டி' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டஒவ்வொருவிடயத்திலும்தரமான முதல் மூன்று படைப்புக்களுக்கும் பரிசு வழங்கப்படும் பிரசுரிக்கத் தகுதியானவை விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ வெளியீடான' சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பும்போது,அனுப்புபவர் தனது பெயர், வயது, முகவரி என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது படைப்புக்களை 1993-02-10 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக, உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.


விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

(சி-5732)

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

O/L
DAY CLASS
(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரம்)
ஆரம்பம்
16-1-93 காலை 7.45
யூனிவேர்சல்
சுந்தர்மடம் - யாழ்ப்பாணம்
(சி/5769)

# முகமூடிகள் கிழிகின்றன




மிகத் தொன்மையான நாகரிகத்தை, பண்பாட்டை - ஆத்மஞானத்தின் அறிவொளியை - வேத விளக்கங்களை தத்துவ ஞானங்களை - மானுடநேயத்தை - அண்ணல் காந்தியின் அகிம்சையை - நேருவின் பஞ்சசீலத்தை- இன்னும் உயர் விழுமியங்களை குறிக்கும் என்னென்ன அடைமொழிகள் உண்டோ அத்தனையும் தன்னகத்தே கொண்ட நாடு என நம்பப்பட்ட-நம்ப வைக்கப்பட்ட நாடு அது. ஆனால் இன்று, அயோத்திய அவமானத்தில் எல்லாவற்றையும் இழந்து அம்மணமாக நிற்கின்றது. இராமர் பிறந்ததும் அயோத்தியில் - இந்தியா இறந்ததும் இன்று அயோத்தியில் - கழிவிரக்கத்தால் இந்தியா கலங்கி நிற்கின்றது.

அயோத்தி சம்பவம் தற்செயலாக - சந்தர்ப்பவசத்தால் நடந்த நிகழ்வா? அவ்வாறுதான் உலகை நம்ப வைக்க இந்தியா முயல்கிறது. ஆனால் இனி முடியாது. முகமூடிகள் கிழிகின்றன. உண்மையின் பயங்கரத் தோற்றம் மீண்டும் வெளி வந்து விட்டது. சிறிலங்காவில் 1983 கறுப்பு யூலை நிகழ்வுகளோடு அயோத்தி நிகழ்வை ஒப்பிட்டு ஒருவித (குரூர) திருப்தியைச் சிறிலங்கா காண்கிற அளவுக்கு இந்தியாவின் நிலை பாதாள மட்டத்துக்கு சென்று விட்டது. உண்மை என்ன? இந்தியா என்கிற ஒரு நாடு வன்முறையில் பிறப்பிக்கப்பட்டது வன்முறையின் கருவிலே அது உதித்தது. மனித உலகம் என்றும் மறக்காத கொடிய படுகொலைகள் மத்தியிலே நாடு உருவானது. அவை இன்றும் தொடர்கின்றன.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது நேரு அவர்கள் மேற்கொண்ட பெரும் முதல் இராணுவ அடக்குமுறையின் கோரங்கள் யாவும் இன்று வெளி வந்துவிட்டன. இந்தியாவிலேயே பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடியாக கருதப்படும் புச்சலபள்ளிசுந்தரையா அவர்களால் (1985 இவர் மரணமானார்.) எழுதப்பட்ட 'வீரத் தெலங்கானா' என்ற வரலாற்று நூல் இன்றைய இந்தியாவின் நிலையை அன்றே கூறி விட்டது. இந்நூல் தமிழில்தியாகு அவர்களால் 'வீரத்தெலங்கானா - ஆயுதப் போராட்டமும். அதன் படிப்பினைகளும்' என மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. (இத் தியாகு என்கிறவர் முன்னர் நக்சலைட் என்று காரணம் காட்டி சிறையிலிடப்பட்டவர், பின்னர் இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தவர் தற்போது தமிழ்நாட்டில் தியாகி திலீபன் மன்றத்தின் தலைவர்) சுந்தரையா அவர்கள் தெலங்கானாப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றியவர். போராட்டம் நடந்து 20 வருடங்களின் பின்னே இந்நூல் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் முழுமையான செய்திகளை வாசிக்கும் எவரும் இந்தியா ஒரு சனநாயக நாடு என்பதில் உள்ள பொய்மையை உணர்வதோடு, பின்னொரு காலத்தில் இந்தியப் படைகள் தமிழீழத்தில் செய்த அட்டூழியங்களின் தோற்றுவாயினையும் காண்பர். பல வகையில் இந்தியப் படையினர் தமிழீழ வரலாறு ஏதோ வகையில் தெலங்கானா நிகழ்வுகளோடு ஒத்துப் போவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஏறத்தாழ 47 ஆண்டுகட்கு முன் நடைபெற்ற நிகழ்வுகள் நோக்கி நாம் செல்ல வேண்டும். இந்தியா சுதந்திரம்பெற முன் அது தனித்தனி சமஸ்தானங்களாக நிலவுடமை பிரபுக்களின் பிடியிலிருந்தது. அவ்வாறு ஐதராபாத் என்கிற சமஸ்தானமும் நிஜாம் என்கிற கொடியவன் கையிலிருந்தது. இதன் ஒரு பகுதியாக இருந்ததுதான் உழவர் பெருமக்கள் பெரிதும் வாழ்ந்த தெலங்கானா பகுதி நிலப்பிரபுக்களின் கொடுமையால் இம்மக்கள் பெரிதும் உழன்றனர். 80 வீத நிலங்கள் 3 அல்லது 4 வீதமானோர் கையிலிருந்தது. மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அப்போதைய பொது உடைமைக்கட்சி இதற்கு தலைமைதாங்கியது. இதுவே தெலங்கானா போராட்டம் எனப்படுகின்றது. இவ் உழவர் எழுச்சியானது ஆயுதப் போராட்ட வடிவமாகவும் கெரிலா போராட்ட வடிவமாகவும் மாற்றம் பெற்றது ஏறத்தாழ 5 ஆண்டுகள் 1946-1951 வரை நீடித்தது. முதல் இரண்டு ஆண்டுகள் நிஜாமின் ஆயுதப்படைக்கு எதிராகவும் பின்னர் இந்தியப் படைக்கு எதிராகவும் நடைபெற்றது. நேருவால் அனுப்பப்பட்ட 50,000 பேரைக் கொண்ட இந்தியப் படைகள் தெலங்கான எங்கும் முகாம்களை அமைத்தன. இவர்கள் நோக்கம் உழவர் எழுச்சியை நசுக்கி அவர்களிடமிருந்த 10 இலட்சம் ஏக்கர் நிலத்தை மீட்டு திரும்பவும் பெரு நிலப்பிரபுக்களிடம் ஒப்படைப்பதுதான். இவர்கள் தான் தமிழீழத்திலும் புலிகளின் ஆயுதங்களை பெற்று இலங்கை அரசிடம் ஒப்படைக்க வந்தவர்கள் என்பதன் வரலாற்று தொடர்பை நாம் இங்கே காணலாம். 1948 இல்நாடெங்கும் சுதந்திரம்குறித்து மக்கள் ஆனந்தப்பட்ட போது தெலங்கானாவில் நேருவின் படைகள் அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டன. மிகவும் மூர்க்கத்தனமாக இப்படைகள் செயற்பட்ட தற்கான ஆதாரங்கள் யாவும் இப்போது வெளிப்படுத்தப்பட்டு விட்டன. தத்துவப் பெருமகனான நேருவிற்கோ உழவர் துயரம் குறித்து எவ்வித கவலையும் இருக்கவில்லை. ஏனென்றால் தொடக்கத்திலிருந்தே காங்கிரஸ் தலைவர்கள் நிலப்பிரபுத்துவத்தோடு கூட்டுச் சேர்ந்திருந்தார்கள். வாழ்நாளெல்லாம் விமானியாக பறந்து தற்செயலாக பிரதம மந்திரியான ராஜிவ் காந்தியின் காலத்திலே 60 முதல் 70 வீதம் வரையிலான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலவுடமை வருக்கத்தை சேர்ந்தவர்கள். எனவே நேருவின் காலம் பற்றி சொல்லத் தேவையில்லை.

சுதந்திர இந்தியாவின் தெலங்கானா மக்கள் சிந்திய குருதி இன்றும் தொடர்கின் தொடர்ந்து அவ்வப்போது இராணுவ பொலிஸ் முகாம்களில் கொடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். இராணுவத்தினரின் தேடுதல் வேட்டையால் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இலட்சக்கணக்கான மக்கள் சீரழிந்தனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான

## பாலகுமாரன்

றது. இந்திய அரசின் முதல் இராணுவ நடவடிக்கையின் விளைவுகளை பாருங்கள். உழவர்களும் பொதுவுடமை கட்சியினருமாக மொத்தம் 4000 பேர் படுகொலை செய்யப்பட்டனர். (தற்போது இத் தொகை 6000 என சில ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது)மிகக் குரூரமான முறையில்இக்கொலைகள் நடாத்தப்பட்டன. நெருப்பிலிடல், லாறி வண்டியோடு கட்டி சாகும் வரைஇழுத்தல், வைக்கற் போரில் போட்டு உயிரோடு கொளுத்தல், பிறப்புறுப்பை துண்டித்துவிடல், கண்டதுண்டமாக வெட்டல், கொதிக்கும் வெந்நீரை ஊற்றிக் கொலை செய்தல் இவ்வாறு பற்பல 'நவீன' முறைகளை கையாண்டு வறுமையின் கொடுமை தாங்காமல் போராடியோர்களைகொன்று குவித்தார் நேரு. மேலும் பத்தாயிரம் பேர் 3,4 வருடங்கட்கு காவல் முகாம்களில், சிறைகளில் வைக்கப்பட்டனர். 5000பேருக்குமேற்பட்டோர் மக்களின்உடைமைகள்நாசமாக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்காளானர்.இவ்வாறாக 16,000 சதுரமையில் பரப்பில் 30 இலட்சம் மக்கள் சொல்லொணாத்துயரத்திற்கு உட்படுத்தப்பட்ட கதைதான் இது.

அடக்கு முறைக்குட்பட்ட கிராமங்களில் எல்லாம் ஜெனரல் சவுக்திரி தலைமையில் சென்ற இந்திய இராணுவம் ஒரு விசித்திரமான வணக்க முறையொன்றை கடைப்பிடித்தது. ஒரு உதாரணம்: 1949 யூலை 14ம் நாள் விடியற் காலையில் 200 இராணுவத்தினர் எல்மாரு என்கிற கிராமத்தை முற்றுகையிட்டனர். எவரையும் வெளியேற விடவில்லை. விடிந்த பின் மக்களை மூன்று பகுதிகளாக உள்ளூர் பாடசாலை யொன்றிற்கு கூட்டிச் சென்றனர். அங்கு ஆண்கள் எல்லாரையும் நிருவாணமாக்கி 10கசையடிகள்ஒவ்வொருவருக்கும் கொடுத்தனர். பின்னர் பிறந்தமேனியாகஊர் முழுக்க ஊர்வலமாககொண்டுசென்று கிராமத்திலுள்ள காந்தியின் சிலைக்கு முன்னால் அவ்வாறே விழுந்து வணங்கச் செய்தனர்'' அனேகமாக எல்லா கிராமங்களிலும் அண்ணல் காந்திக்குஅவ்வாறே ''நிர்வாண நமஸ்காரம்'' செய்யப்பட்டது.

கோரப் படுகொலைகள் உயிரோடு எரித்தல். கூட்டம் கூட்டமாக கொன்று குவித்தலோடு இந்தியப்படை நிற்கவில்லை,பலஆயிரக்கணக்கான பெண்கள் மேல் மோசமான இழிவான முறைகளில் பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டது. இதிலுள்ளகொடுமை என்னவென்றால் 10 வயதுச் சிறுமியர் கர்ப்பிணித்தாய்மார் மகவைப் பெற்றெடுத்த தாய்மார் என மனிதம் இல்லாமல் தெலங்கானா பெண்களை வாட்டி வதைத்தனர். சுதந்திர இந்தியாவில் மக்களுக்கு கிடைத்த முதல் பரிசு இது. இதுதான் இந்தியாவின் உண்மை முகம்,மதவெறி,இராணுவ அடக்குமுறை. குடும்ப ஆதிக்கம் இவற்றினை மறைக்கும்சனநாயகவேடம். வேடம் கலைந்து விட்டது. அயோத்தியில் பாபர் கட்டிய மசூதியை இடித்த பாரதிய ஜனதாக் கட்சி (சிவசேன ஆர். எஸ்.எஸ் போன்றவைஎல்லாம்அடக்கம்) யும்இடிக்குமட்டும்அதைபார்த்துக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக்கும் வேறுபாடு என்ன? எல்லாம் ஒரேமுகம் இந்தியாவின் உண்மைமுகம்.

---

# மனம் மாறும்

றும் அடக்கு முறைகளுக்கு அனைத்து மக்களுமே ஆளாகி உள்ளார்கள். மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டு அவர்களை இணைக்கும் பணியில் நாம் ஏலவே செயலாற்றி வருகிறோம். தம்மை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் முன் வர வேண்டும்.

★ கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் பயணிகள் பிணமாக விழுந்த கிளாலி கடல் ஏரி வழியாக நீங்கள் வந்துள்ளீர்கள் ஆயரும், நீங்களும் படுகொலைகளை அறிவீர்கள் இச்சம்பவம் குறித்துக் கண்டன அறிக்கை நீங்கள் வெளியிடாதது ஏன்?

அப்பாவிப் பொதுமக்களை எவர் கொலை செய்தாலும் நாம் அவர்களைக் கண்டிக்கத் தவறுவதில்லை. நாம் கொழும்பு திரும்பியதும் கிளாலிக் கொலைகள் குறித்து எமது கண்டனத்தை அரசுக்குத் தெரியப்படுத்த உள்ளோம். மக்கள் தங்கு தடையின்றிச் சுயமாக நடமாடக் கூடிய சூழ்நிலையை அரசு வழங்க வேண்டும். பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதுவும் அரசின் கடமை. கடலில் வைத்துப் பயணிகளைச் சுடுவது பயங்கரமானது. கடல் வழிப் பிரயாணத்தால் பயணிகள் கடலில் மூழ்கிச் சாகும் அபாயம் உள்ளது என்பதினை அரசு உணர வேண்டும்.

★ நல்லெண்ண அடிப்படையில் புலிகள் இரண்டு யுத்தக் கைதிகளை விடுதலை செய்து உங்களிடம் ஒப்படைத்துள்ளார்கள். இதனை நீங்கள் எப்படிக் கணிக்கிறீர்கள்? பதிலுக்குப் பயன் பொருத்தமாக ஏதும் திட்டம் உங்களிடம் உள்ளதா?

புலிகளின் மனித நேயத்துக்குப் பதில் பயன் பொருத்தமாகச் செயலபடுவது அரசைப் பொறுத்தது. தனக்கும் மனிதநேயம் இருக்கிறது என்பதை அரசு காட்டிக் கொள்ள வேண்டும். மனித நேயம் இருப்பதாக மாத்திரம பேசிகொள்வது சாத்தியப்படாது இதில் பதிலுக்கு செயற்படுவது எங்களை மாத்திரம்சார்ந்ததல்ல. மனித நேய அடிப்படையில் இருவரை விடுதலை செய்தமைக்கு பிரபாகரனுக்கு ஆயரும், நானும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

★ பூநகரிப் பாதையைத் திறந்து விடுவது பற்றி அரசிடம் பேசும் யோசனை இல்லையா?

ஆயரும் நானும்இதுகுறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் பேச உள்ளோம். இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்திலும் போக்கு வரத்துக் தடை பற்றி ஆலோசனை கலந்து அதனூடாகவும் நடவடிக்கை எடுக்கலாம் — செயற்படலாம்என்றிருக்கிறோம்.

★ இங்கிலாந்தின் குடியேற்ற நாடாக இலங்கை இருந்த காலத்திலேயே இலங்கையில் இனப் பிரச்சினைக்கான விதைகள் விதைக்கப்பட்டது எனலாம். அத்துடன் இலங்கைக்கு உதவும் நாடுகளில் இங்கிலாந்தும் ஒன்று. இதே வேளை வரலாற்று ரீதியில் அங்கிலிக்கன் திருச்சபை இங்கிலாந்தில் செல்வாக்குள்ள ஒரு மத ஸ்தாபனம். இந்தப் பின்னணியில் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை எட்டுவதற்கு உதவும் வகையில் அங்கிலிக்கன் திருச்சபை இங்கிலாந்து அரசை அழுத்தினால் என்ன?

அங்கிலிக்கன் திருச்சபை நீதிக்கும் சமாதானத்துக்கும் உழைக்கும். ஒரு சமயம் கொழும்பு வந்து திரும்பியுள்ள கன்ரபரி அதிமேற்ராணியார் இது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். ஏலவே இதுதொடர்பாக சில கருத்துகளை அங்கிலிக்கன் திருச்சபை இங்கிலாந்து அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. இங்கிலாந்து அரசும் இத் துறையில் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இங்கிலாந்து உயர்ஸ்தானிகர் கிளாட்ஸ்ரோன் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டது இதற்கான ஓர் உதாரணமாகும்.

★ யாழ்ப்பாணத்தின் நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இப் பகுதியில் மக்கள் படும் இன்னல்கள் பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அரசு வட பகுதி மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கியிருக்கிறது. மக்களைக் கொடுமைப் படுத்திக் கேவலமான நிலைக்குத் தள்ளியிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிக்கொண்டு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திசைமாறி மக்களையே பெரிதும் பாதிக்கின்றன. கொழும்பில் உள்ள அரசு தமது அரசு தானா என்று மக்கள் கேட்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது யாழ்ப்பாணத்து மக்கள் மேல் கொடுமை, அவலங்கள் மற்றும் துன்பங்களைக் கட்டவிழ்த்து விட அரசுக்கு எந்த உரிமையுமில்லை குடிமனைகள் இருக்கும் இடங்களில் விமானத் தாக்குதல்கள் நடத்துவது நியாயமற்றது. யாழ்ப்பாணத்து மக்களுக்குக் கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளது உண்மைதான், ஆனால், யாழ்ப்பாண மக்கள் புத்திக் கூர்மை உள்ளவர்கள் என்பதால் அவர்கள் காட்டும் எதிர்ப்பு பலமாக உள்ளது.

Computer Programming
in
BASIC Language
4 MONTHS
திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: 18-01-1993
10 - 30 மணி

Lectures By: S P Sivapathasundaram
M. I. D. P. M. (Lond.)

★ கட்டணம் தவணை முறையில்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்.

I. A. B (All Stages), LOTUS 1-2-3
SHORT-HAND & TYPING நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16 3rd CROSS STREET, JAFFNA.
(சி-5784)


## 1-வதுபிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வி தவரூபா ★

சண்முகலிங்கம் தவமலர் தம்பதியினரின் செல்வப் புதல்வி தவரூபா தனது முதலாவதுபிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அத்தான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மகன்மார், மகள்மார் இவரை பல்கலையும் கற்று பேச்சியம்மன் அருளோடு நீடுழிவாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

தோப்புக்காடு, —குடும்பத்தினர்
காரைநகர். (4001)

## முதலாவது வயது நிறைவில்
### அன்னநடை பயிலும் வண்ணமயில்

செல்வி
**மஞ்சுபார்கவி அமரநாதன்**
[15. 01. 1993]

கவிக்குட்டியை, தமிழ் கலாசாரத்தின் கலை, கல்வி, பண்பாடுகளின் கோட்டிடையே நின்று, சிறந்த ஒரு தமிழ் மகளாய் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்கவென வாழ்த்துவோர்

அன்பு அண்ணா வித்யாஷாகர்
குடுப்பத்தினருடன்
பெற்றோர், பேரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
[3992]

## வீரச்சாவு



வீரவேங்கை ஆரணி

நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மணலாறு சிலோன் தியேட்டர் இராணுவமுகாமிற்கும் முந்திரிகைக்குள இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த இராணுவ காவலரண் தகர்ப்பின்போது விழுப்புண் அடைந்த பெண் போராளி வீரவேங்கை ஆரணி (கந்தையா பிரேமலதா, நவபுரம், கைதடி) நேற்று (14-01-1993) அதிகாலை 4-30 மணியளவில் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### ஈராக்

தும் பத்திரமாக தளத்திற்கு திரும்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் மீது அமெரிக்காவும் அதன்நேசநாடுகளும் நடத்திய விமானத் தாக்குதல்களினால் 19 ஈராக் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 15 பேர் காயமடைந்ததாகவும் பாக்தாத் வானொலி அறிவித்தது.

### டென்மார்க்

ஆறு வருடங்களுக்கு முன் மேற்கொண்ட முடிவு தொடர்பானது இந்த நீதி விசாரணை.

சர்வதேச சட்டத்துக்கு விரோதமான இந்தச் செய்கையில் தனது அரசு ஈடுபட்டது பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று பிரதமர் மறுத்திருக்கிறார்.

பிந்திக்கிடைத்த செய்தியின்படி இவ்விவகாரத்தினால் டென்மார்க் பிரதம மந்திரி போல்ஸ் லோற்றர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என தெரியவருகிறது.

### கிளாலி

கருத்தில் கொண்டு பயணிகள் ஒவ்வொருவரதும் விபரங்கள் இன்றிலிருந்து பதிவு செய்ய எண்ணியுள்ளோம். எனவே இதன்போது சிரமம் பாராது மக்கள் யாவரையும் ஒத்துழைப்பு நல்கி உதவுமாறு வேண்டுகின்றோம்.

### வன்னி

மன்னார் பிரதான வீதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளப்படும் முயற்சியாக இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன

### படைக்கு

தப்படும் என்று இராணுவ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. போரிடும் இராணுவ அணிகளில் இருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கும், புலிகளின் தாக்குதல்களால் பலவீனப்பட்டுள்ள இராணுவ அணிகளை மேலும் பலப்படுத்தவும் இந்த ஆட்சேர்ப்பு நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

புலிகளுக்கு எதிரான போர் தீவிரமாக்கப்பட வேண்டுமானால் போர் முனையில் இருக்கும் நூற்றுக்கணக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுமெனவும், அதற்காகவே இந்த ஆட்சேர்ப்பு நடத்தப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

## கருத்தரங்கு

தீவகக் கோட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட "விஞ்ஞான அறிவியல் விளக்கங்கள்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெற உள்ளது. இதில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு தீவகக் கோட்டத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## சந்திப்பு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள்களைத் திருத்திய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மேலதிக தரவுகள் பெற வேண்டியிருப்பதால் சகலபாட பிரதம தேர்வாளர்களையும் 17-01-93 ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.00 மணிக்கு தமிழீழக் கல்விக்கழக அலுவலகம் நல்லூருக்கு தவறாது வருகை தரும்படி மதிப்பீட்டுக்கிளைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### பேச்சு

ளூர்க்கு வடக்கில் உள்ள உண்மை நிலை தெரியாது. அங்கு செல்லும் வரை இப்படியான ஒரு நிலை இருக்கும் என எமக்கு தெரியாது இதுவரை வடக்கு-தெற்கு மக்கள் துன்பப்பட்டது போதும். துன்பத்தை முடிவுக்கு கொண்டுவர சமாதானத்தை நோக்கி செல்லவேண்டும் எந்தநாளும் மக்கள் துன்பபடமுடியாது. புலிகளின் தலைவர் பிரபாகரன், ஆயர்கள் மூவரையும் சந்தித்துபேசியதுமூலம் அவர் தீர்வு ஒன்றை நிலை நாட்ட முயல்கின்றார் என்பதையும்பேச்சுவார்த்தையையே பெரிதும் விரும்புகின்றார் என்பதையும் காட்டுகிறது" என்றார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 16 |
| — | — |
| 03 | 12 |
| — | — |
| 1910 | 1992 |

### திருமதி
### முதலித்தம்பி முத்துப்பிள்ளை

அம்மா என்று அன்புடன் அழைக்க
இனி நீ இல்லையம்மா
அன்புடன் வளர்த்தாய் - அரவணைத்தாய்
ஆறாது என் துயரம்

15-01-93 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சுன்னாகம் மேற்கு, இ. நிமில்விஜயசேகரா
அம்பனை. (4062) (பேரன் - தங்கப்பவுண்)

## தகனக்கிரியை பற்றிய அறிவித்தல்

பண்டிதர்
**சோ. தியாகராஜபிள்ளை**

10 - 01 - 1993 ஞாயிறு சிவபதமடைந்த ஊர்காவற்துறை கரம்பனைச் சேர்ந்த பண்டிதர் சோ. தியாகராஜபிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (15 - 01 - 1993) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

45 சபாபதி வீதி, தகவல்:
கொக்குவில். தி. பத்மநயனி (மகள்)
(4004)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 14.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8009

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

42-9326, 24-9938, 41-9663, 27-9030, 22-7271, 27-1292, 27-6583, 42-1046, 26-9745,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

28-0523, 42-7975, 24-4303, 24-4350, 26-5244, 24-1040, 26-4727, 28-1020, 40-2829, 24-0878, 26-8917, 41-5417, 41-8467, 41-1531, 28-6020 28 1414, 26-6077, 28-1706, 28 6623, 42-1320, 26-9658, 24 2655, 26-3017, 24-6646, 27-4162, 41-3931, 27-2004, 28 4055,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.